செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

இருபத்தேழாந்தொகுதி.

Vol. XXVII.

விபவ—சுக்ல ௵

1928-29.

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

செந்தமிழ்.

இருபத்தேழாந்தொகுதியின் உள்ளுறை

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அகலிகைவெண்பா:- (திருத்தமும் புதுப்பாட்டும்.)	ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.	ருகக
அருணந்திசிவாசாரியசுவாமிகள்:-	,, சோமசுந்தரதேசிகர்.	உரு
அரும்பொருள் விளக்க நிகண்டு:-	,, S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.	ருஉஅ
ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக் குறிப்பு:—		உஉஎ
ஒருகுறிப்பு:—	உதவிப்பத்திராதிபர்.	ச0
ஒருசெய்யுட் பொருளாராய்ச்சி:—	ஸ்ரீமத். சி. கணேசையர்.	ருஅகூ
ஓர் ஆராய்ச்சி:—	,, ரெ. இராமையங்கார்.	அரு
கம்பராமாயண இன்கவித்திரட்டு:—	,, ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.	க, உஅக, ச0ரு
கவியின்பம்:—	,, சி. கணேசையர்.	சுகூ
குருபரம்பரை:— (எம்பெருமானார் வைபவம்)	உதவிப்பத்திராதிபர்.	கக, சகூ, ச0கூ, கருக, கஎகூ, உ0எ, உசக, சகரு.
சேரர்தாயமுறை:-	ஸ்ரீமத். ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L.	ககங
சேரவேந்தர் தாயவழக்கு:—	,, மு. இராகவையங்கார்.	ருஉகூ, ருசுக

தனித் தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக் குறிப்பு:—		௨௨௫
திருவிசையமங்கை:-	ஸ்ரீமத். வை. சுந்தரேசவாண்டையார்	௨௮
தொண்டைநாடு:—	,, சோமசுந்தரதேசிகர்	௨௫௭
தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி:—	,, சி. கணேசையர்	௨௩௩, ௩௦௫, ௩௯௭
தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு:—	,, P. S. சுப்பிரமணியசாஸ்திரியார் M A.; L T.	௩௧, ௫௬, ௮௬, ௧௫௭, ௧௮௬, ௨௧௭, ௨௭௬, ௩௧௧, ௩௫௬, ௩௯௧, ௪௨௧.
பண்டைத்தமிழரின் இசையும் இசைக் கருவிகளும்:—	,, தாக்ஷிணாத்யகலாநிதி— மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையர்	௧௯௩
பிரகிருதிசாஸ்த்ரம்:	,, N. R கிருஷ்ணமூர்த்தி ஐயர் M A	௪௧, ௭௧, ௧௯௧
பிழைதிருத்தம்:—		௪௦௪
பிறிதுபிறிதேற்றல்:	ஸ்ரீமத். சி. கணேசையர்.	௫
புத்தகப்பாதுகாப்பு:	,, P. N. அப்புசுவாமி ஐயர் B A, B L.	௨௯௫
புத்தகம் இயற்றுவது ஏன்:—	ஷை	௧௭௩
பெண்மை:—	ஸ்ரீமத். ச. சோமசுந்தர பாரதியார் M A, B L.	௩௯௯
பெருமணிக் கோத்து:—	,, K. S நவநீதகிருஷ்ணபாரதியார்.	௨௭௬
பொன்மாளிகைத் துஞ்சினதேவர்:-	,, சோமசுந்தரதேசிகர்.	௧௭
மதிப்புரை:—		௩௬, ௮௮, ௨௬௭, ௩௧௮.

மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் வரவு செலவுகணக்கு:—	,,	(பகுதி—உ, ந, ச, அ, கூ, க0, கஉ.)
ஷெசங்க நிர்வாக ஸபைத்தீர்மானங்கள் :—		க௫0, நஅஅ.
மறைஞான சம்பந்தர்:—	ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர்.	கூ௫
மெய்ம்மை :—	,, ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L.	ந0க
யாப்பருங்கலக் காரிகையும் புத்துரையும்:—	,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியார்.	உஎச
வள்ளுவர்சொற் சுருக்கம்:—	ஜெ. நாராயணசுந்தரம்.	உச௫

இத்தொகுதியில் வெளிவந்த நூல்கள்.

[முற்றுப்பெறாதவை]

அரும்பொருள் விளக்க நிகண்டு:—	ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளை B A , B L. (பகுதி—கூ, க0, கக, கஉ,
மாறனகப்பொருளும் திருப்பதிக் கோவையும் :—	உதவிப்பத்திராதிபர். (பகுதி—க, உ) ந, ௫, கூ, எ, அ, கூ, கக.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—உஎ.] விபவ௵ கார்த்திகை௴ [பகுதி—க.

Vol. XXVII. *November-December-1928.* No. 1.

கம்பராமாயண இன்கவித்திரட்டு

[உகூ-ம் தொகுதியின் ருகூஅ-ம் பக்கத்தொடர்ச்சி]

404. "தேர்தந்த அல்குற் சீதை, தேவர்தம் உலகில் இம்பர்
வார்தந்த கொங்கை மாதர் வயிறுதந் தாளும் அல்லள்.
தார்தந்த கமலத் தாளைத் தருக்கினர் கடையச் சங்க
நீர்தந்த தீதனை வெல்வான் நிலம்தந்து நிரம்பிற் றன்றே."

இ-ள். சீதை, தேவலோகத்து மாதர் பூலோகத்து மாதர் (நாகலோகத்து மாதர் ஆகிய இவர்கள் எவர்கள்) வயிறும்(பெற்றுத்)தரப்பட்டவளல்லள். (பின்னை எவ்வாறு தரப்பட்டாளென்னில், அமுதம் அருந்திக் களிப்போமென்னும்) களிப்புடையோர் (ஆன தேவாசுரர் கடலைக்) கடைய, (அந்தக் கடல்) நீர், இலக்குமியைத்(தன்பால் தோன்றச் செய்து)தந்தது. (தரும்வரை, 'பாரும் நீரும்' என்றும் 'நீரும் நிலமும்' என்றும் சேர்த்துச் செப்பப்படுதற் கியையப், பூமியும் கடலும் ஒன்றற்கொன் றேற்றத் தாழ்வில்லாதிருந்தன. பின்பு இலக்குமியை ஈந்தகாரணத்தால் நீர் நிலத்தை வெற்றிகொண்டதாயிருந்தது. அப்படி வெற்றிபெற்றிருந்த நீரை) வெல்லும்படி நிலமானது (திருமகளினும் சிறந்த அழகுடைய சீதையைத்) தந்து நிறைவுற்றது.

ஈற்றடியில் வந்த 'தந்த' என்பது அதற்கு இயல்பாகவுள்ள 'கொடுத்த' என்ற பொருளையும் ஏனை மூன்றடிகளிலும் வந்த 'தந்த' மூன்றும் எதுகையில் நிற்றல்பற்றி முறையே 'போன்ற' 'அணிந்த' 'பூத்த' என்ற பொருள்களையும், தருதல் காண்க. இம்பர் - இவ்வுலகம் - பூமி. வார் - கச்சு. பாட்டிற் கூறப்பட்ட தேவமாதர் மானுடமாதரோடு கூறப்படாத நாகமாதர் உபலக்கணத்தால் உரையிற் சேர்த்துக் கூறப்பட்டிருத்தல் அறிக. 'மாதர் வயிறுதந்தாளுமல்லள்' என்பதன் பொருள் 'மாதர் (கள் எவர்கள்) வயிறும் தந்தாளல்லள்' என்பதாதலால், அதற்கியைய 'வயிறுதந்தாளுமல்லள்' என்பதில் உள்ள உம்மையைப் பிரித்துக்கூட்டி 'வயிறும் தந்தாளல்லள்' எனக் கொள்க. 'தரப்பட்டாள்' என்ற செயப்பாட்டுவினை படுவிகுதிதொக்குத் 'தந்தாள்' என வந்தது; எழுதப்பட்ட ஓலை எழுதிய ஓலையென வருதல்போல. தார் - பூ. 'தார்தந்த' என்பது 'கமலத்தாள்' என்பதிலுள்ள கமலத்துக்கு அடை. பூவாததாமரை இலக்குமி இருக்கைக் குரியதன்று. அதனை நீக்குதற்குத் 'தார்(-பூ) தந்த(-பூத்த) கமலம்' என்றுரைளென்க. தார்தந்த கமலத்தாள் - பூப் பூத்த தாமரையை (அப் பூவை ஆதனமாகக்கொண்டு) உடையவள் - இலக்குமி. 'தார்' என்பதற்கு மாலையெனப் பொருள்கொண்டால், (திருமாலுக்கு மண) மாலை அளித்த எனப் பொருள்பட்டுத், 'தார்' 'கமலத்தாளுக்கு' அடையாம். தருக்கு - களிப்பு. தருக்குதலுக்கு மிகுதல் (சிந்தாமணி, புறநானூறு, ஐங்குறுநூறு) என்றும் மேம்படுதல் (பரிபாடல்) என்றும் பொருளுண்டு. அப்பொருள்கள் கொண்டால், 'தருக்கினர்' என்பதற்கு (எண் அல்லது தொகை) மிகுந்தோர் (ஆன தேவாசுரர்) என்றும் (மக்களாதி உயர்திணை உயிர்களுள்) மேம்பட்டோர் (ஆன தேவாசுரர்) என்றும் பொருள்செய்க. சங்கநீர் - சங்குகளையுடைய சமுத்திரம். முந்நீர் என அடைபெறுமலே நீர் சமுத்திரத்தின்பெயராம் (உரிச்சொல் நிகண்டு). வெல்வான் - வெல்லும்பொருட்டு. வான் எதிர்காலங்காட்டும் வினையெச்சவிகுதி. அன்றே ஈற்றசை.

'கமலத்தாளை நீர் தந்தது. அதனைப்போலச் சீதையை நிலம் தந்தது' என்னாமல், 'அதனை வெல்வான் சீதையை நிலம் தந்தது' என்றதனால், இலக்குமியினும் சிறந்த அழகுடையாள் சீதையென்பது சூசிப்பிக்கப்பட்டது.

சீதை இலக்குமியினும் சிறந்த அழகுடையாளென்பது குறிக்கக், 'கமலத்தாளை நீர்தந்தது ; அதனை வெல்வான் சீதையை நிலம் தந்தது' என்று கூறியவள் அம்மட்டோடு நில்லாமல் 'நிலம் தந்து நிரம்பிற்று' என நிரம்பிற்று என்பதை அதிகமாக ஏன் கூறினாளென்றால், நீர் ஒரு மகளைத் தந்ததுபோல, நிலம் ஒரு மகளைத் தாராதிருந்த குறை இப்போது சீதையைத் தந்து நிரம்பிற்று என்பதன்று: அது சிறப்புடைய காரணமாகாது, திருமகளினும் சிறந்த ஒரு மகளைத்தந்து பெருவெற்றிபெற்ற நிலம் கேவலம் குறைநிரம்பியதினும் சிறந்தபயன் அடைந்ததாதலால். 'நிரம்பிற்று' என்றதற்கு வேறுகாரணம்யாது என்றால், சிறந்த அழகு நிறைந்த சீதை, சிறந்த கலைகள் நிறைந்த பௌர்ணிமிச்சந்திரன் போல்வாள் ; ஏனைய எழிலுடை மாதரெல்லாரும், பௌர்ணிமித் திதியல்லாத பல திதிக் கலாமதிகள் போல்வார் ; குறைமதிகளான மற்றெல்லாச் சந்திரர்க்கும் மேம்பட்ட நிறைமதியான பூரணைத் திங்களுக்கு மேற்பட்ட திங்கள் உளதாதல் இயலாதது: அதுபோல, இலக்குமியையுள்ளிட்ட, அற்பமாகவேனும் அதிகமாகவேனும் அழகு குறைந்த மாதரனைவர்க்கும் மேம்பட்டு நிறைந்த அழகுடைய சீதையினும் சிறந்த அழகுடைய பெண் உளளாதலும் இயலாதது. சீதை, 'இருதிறத்தார்க்கும் செய்த வரம்பிவர் இருவர்' என்றதற்கேற்ப, அழகுக்கு இறுதி எல்லையான சம்பூரண சௌந்தரியமுடையவள் ; இலக்குமி, ஏனையமாதரியாவரினும் மிக்க அழகுடையாளேயன்றி முற்றழகுடையாளல்லள், முற்றழகுடையாளாயிருந்தால் மற்றொரு முற்றழகுடையாளால் நிகரப்பெற்றிருப்பாளேயன்றி வெல்லப்பட்டிராளாதலால். நீரும் நிலமும் என்ற இருபிரிவினுவாகக் 'கமலத் தண்ணல் - ஆக்கிய உலகமெல்லாம் அன்றுதொட் டின்றுகாறும் - பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்திரு படிவம் ஆகிய (நீர்தந்த) திருமகள் நிலம்தந்த) சீதை பெண்பாரிருவருள்ளே சற்றுக் குறைய முற்றழகுடைய திருமகளைத் தந்த நீர் பூரண பாக்கியத்திற் சிறிது குறைந்த பாக்கியமேயுடையதாய்ப் பாக்கியம் நிரம்பாதது ; குறைபாடறவேயில்லாத முழுத்த வனப்புடைய சீதையைத் தந்த நிலம் சற்றுங் குறைவற்ற சம்பூரண பாக்கியமுடையதாய்ப் பாக்கியம் நிரம்பியது என்பாள் 'நிலம் நிரம்பிற்று' என்றாளென்பது. இப்படலத்தில் 'கோபமு மறனும்' என்ற பாட்டில் 'நன்மை எல்லாம்'

என்பது, 'எல்லாம்' எனப்பட்டதுபோலப், 'பாக்கியம் நிரம்பிற்று' என்பது, நிரம்பிற்று எனச் சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்னும், 'நிரம்பிற்று' எனக் கூறியதன் காரணம் நீர் அபூரண அழகுடைய இலக்குமியைத் தந்து பெற்ற வெற்றி அபூரணமானது, நிலம் பூரண அழகுடைய சீதையைத் தந்து பெற்ற வெற்றி பூரண மானதென்பாள் 'நிரம்பிற்று' என்றுளென்பதுமாம்: இனிமேல், நீர் ஒரு பூரண அழகுடையாளைத் தரினும், அதனால் அது நிலத்துக்குச் சமானமாமேயன்றி மேலானதாகி வெற்றிபெறமுடியாத குறைவுடைய தாக, நிலம் பூரண அழகுடையாளை முதற்கட்டந்து, முன், நீர்பெற்றுத் தோற்றுவிட்ட வெற்றி போலாத தோலாத வெற்றிபெற்று நிறை வுடையதாகியதென்பாள் 'நிரம்பிற்று' என்றுளென்பதுமாம்.

இந்த அருமந்த கவி, முதற்கட் படித்த மாத்திரத்தில் அவசமாம் படி அதிசயமான களிப்பளிப்பதாய், மேற்கொண்டுபடித்து ஊன்றி நோக்க நோக்க மேன்மேலும் விருப்புவிளைக்கும் சுவைமலிந்த ஆழ்ந்த கருத்துக்கள் தொடுத்துப் புலப்படுவதாய், பேராச்சரியமும் பேரானந்த மும் ஒருங்கு பயந்து, அருமையிலுமருமையாய் இனிமையினுமினிமை யாய் நனி சிறந்த கவிகளுள்ளே சிறந்ததோர் கவியாய்த் திகழ்வதென்பது திண்ணம். இது, சீதை அழகை விளங்கச்செய்யும் பன்னிருசூரியர் போன்ற பன்னிரு கவிகளின் முடிவில் உள்ளதாய், அவ் அழகு வருணனையை இனிது முடிப்பதாய், அக் கவிமணிகளுள் முடிமணியாய் விளங்குவது உளங்கொண்டு கருதுதற்குரியது.

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

பிறிதுபிறிதேற்றல்.

"பிறிதுபிறிதேற்றலு முருபுதொகவருதலு
நெறிபடவழங்கியவழிமருங்கென்ப"

என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தினுட் 'பிறிதுபிறிதேற்றலும்' என்பதற்கு, இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்னும் மூவரும், ஆறாம்வேற்றுமையுருபு மற்றைய உருபுகளை ஏற்றலும் எனப் பொருளுரைத்துச் சாத்தனதனை, சாத்தனதனால்..............சாத்தனதன்கண் என உதாரணம் காட்டினார்கள். அப்பொருட்கண்ணே தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பாசிரியர் சில தடை நிகழ்த்தியுள்ளார்கள்.* அத்தடைகள் வருமாறு:—

சாத்தனதாடை என்பது சாத்தனுடைய ஆடை எனப் பொருள்படுதல்போலச் சாத்தனதனை என்புழிச் சாத்தனது என்பது சாத்தனுடைய எனப் பொருள்படாது சாத்தனுடைய பொருள் எனப் பொருள்படுதலிற் பெயர் உருபேற்றதன்றி, உருபு உருபேற்றதன்று என்பது ஒன்று.

மற்றொன்று, சாத்தனது என்பது பெயராயின் பெயர் உருபேற்றவின்கண் மாறுபாடொன்று மின்மையின் அது கூறல் வேண்டியதின்று என்பது

இவ்விருதடைகளுள், சாத்தனதனை என்புழிச் சாத்தனது என்பது, சாத்தனுடைய என ஆறனுருபின் பொருள்படாது, சாத்தனுடையபொருள் எனப் பெயராய்நிற்றலின் ஆறனுருபேற்றசொல்லன்று என்னும் தடையை முதலில் ஆராய்தும்.

ஆறாம்வேற்றுமை அது உருபிற்கு அஃறிணை ஒருமைப்பொருளைத் தொல்காப்பியர், ஆறாம்வேற்றுமைச்சூத்திரத்து விதந்து கூறிற்றிலராயினும் "இதனதிது" என்பதனானே குறிப்பித்துள்ளனர். அதுகொண்டு உரையாசிரியர்கள் மூவரும் 'அது' ஒருமையுருபென்று உரையிற் கூறினார்கள். அன்றியும், முதனூலாசிரியராகிய அகத்தியனார்,

* செந்தமிழ்த்தொகுதி ௨௬-ல் ௪௨௧-ஆம் பக்கம் பார்க்க.

"ஆறனுருபேயதுவாதவ்வும்
வேறொன் றுரியதைத்தனக்குரியதையென்
விருபாற்கிழமையின்மருவுறவருமே"

என்று கூறியதாக இலக்கணவிளக்கநூலா ருரைத்தனர். நன்னூலாரும்,

"ஆறனொருமைக்கதுவுமாதுவும்
பன்மைக்கவ்வுமுருபாம்"

எனக் கூறினர். ஆதலின், 'அது' என்னும் ஆறும்வேற்றுமையுருபு அஃறிணையொருமைப்பொருளுணர்த்துமென்பது துணிபேயாம்.

ஆகவே, ஒருமையுருபாகிய அது என்பது தன்னையேற்கும் சாத்தன் என்னும் பெயரோடுகூடிச் சாத்தனுடையது என்னும் பொருள் பட நிற்குமன்றிச் சாத்தனுடைய எனப் பொருள்படாது என்பதுந் திண்ணமேயாம். ஆகவே 'சாத்தனதாடை' என்பது 'சாத்தனுடைய பொருளாகிய ஆடை' என்றும், 'சாத்தன ஆடைகள்' என்பது 'சாத்த னுடைய பொருள்களாகிய ஆடைகள்' என்றும் பொருடந்து முறையே, 'இதனதிது', 'இதனவிவை' என ஆறும்வேற்றுமைப் பொருடருமென்ப தூஉம், ஆண்டு அதுவும் அகரமும் உருபென்பதூஉம் வெள்ளிடைமலை போல் விளங்கக்கிடந்தனவேயாம். கிடந்தன எனவே, சாத்தனதாடை என்புழி ஆண்டு 'அது' உருபு பெயராய்நின்றே ஆடையொடுதொடர்ந் தாற்போலச் 'சாத்தனதனை' என்புழியும் ஆண்டு 'அது' உருபு பெய ராய்நின்றே 'ஐ' உருபொடுதொடரும் என்பதூஉம், ஆண்டுவரும் 'அது' வும் உருபென்பதூஉம் பெறப்படும். படவே முதலாவது தடை தடை யன்றென்பது துணிபாயிற்று.

இனி, அது உருபு 'சாத்தனதாடை' என்றவிடத்து எப்படிச் 'சாத்தனுடையதாகிய ஆடை' என நின்று உடைமைப்பொருளுணர்த் திற்றோ, அப்படியே 'சாத்தனதனை' என்றவிடத்தும் 'சாத்தனுடைய தை' என நின்று உடைமைப்பொருளுணர்த்தலினும் தடையின்மை காண்க.

ஆதலின் 'சாத்தனதனை' என்புழிச் சாத்தனது என்பது உரு பானும் பொருளானும் 'சாத்தனதாடை' என்புழிச் சாத்தனது என்பதுபோல ஆறும்வேற்றுமையாதற்குத் தடையின்மை கண்டே, 'பிறிதுபிறிதேற்றலும்' என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்திற்கு, அத்

னுரையாசிரியர்கள் மூவரும் ஆறனுருபு பிறிதுருபேற்குமென உரை கூறினார்கள் என நுண்ணிதாக ஆராய்ந்து கண்டுகொள்க. இவ்வாறு நன்னூலாரும் "ஆறனுருபு மேற்குமவ் வுருபே" என்றார். நன்னூலுரை யாசிரியராகிய மயிலைநாதர் முதலியோரும் அவ்வாறுணர்ந்து கூறுதல் காண்க.

இங்ஙனம் முதலாவதுதடைக்குத் தடையுண்டாகவே இரண்டாவது தடைக்குந் தடையுண்டாயிற்று. எங்ஙனமெனின், பிறிதோருருபு பிறிதோருருபையேற்றன் மாறுபாடாதலானும், ஏனைப்பெயர்போலாது உருபே பெயராய்நின்று உருபேற்றலானுமென்பது.

இன்னும், சாத்தனது என்பது சாத்தனுடைய எனப் பொருள் படுமாயின், ஒருமை, பன்மை, உயர்திணை, அஃறிணை என்ற நியதி யின்றி யாண்டும் 'அது' உருபுவரலாமெனப்பட்டு, நூலாசிரியர்கள் கருத்துக்களோடும் மாறுபடும். என்னை? சாத்தனது ஆடை=சாத்த னுடைய ஆடை, சாத்தனது ஆடைகள்=சாத்தனுடைய ஆடைகள், சாத்தனதுமகன்=சாத்தனுடையமகன் எனப் பொருடந்து வழூவின் றாய் முடிதலின். அன்றியும், உயர்திணைப்பொருளில்வரும் ஆறாம்வேற் றுமைத்தொகைக்கண், அது உருபு விரிக்கப்படாது எனத் தொல் காப்பியர்கூறிய "அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயி—னது வெ னுருபுகெடக் குகரம் வருமே" என்னுஞ் சூத்திரமும் வேண்டியதின் றாம். அன்றியும், "உடைய" என்பதையே உருபாகக்கூறியும் விட லாம். ஆதலின் உடைய என்பது ஆறாம்வேற்றுமைக்குரிய உடைமைப் பொருள் இது என்பதைக் காட்டற்த விரிக்கப்படும் ஓர் சொல்லுருபே யன்றி அதுவின் பொருளன்று என்பது தெற்றெனப்படும்,

இனி, இடைச்சொற்கள் பெயர் வினைகளைச் சார்ந்தன்றித் தம்பொரு ளுணர்த்தாது. என்னை? "இடையெனப்படுப பெயரொடும் வினையொடும் நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே" எனத் தொல்காப்பியரும், அச் சூத்திரவுரைக்கண் "தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற் கிலக் கணமாம்" எனச் சேனாவரையருங் கூறுதலின். அதனால், ஆறனுரு பாகிய 'அது'வும் இடைச்சொல்லாதலின் தன்னையேற்கும் பெயரைச் சார்ந்துநின்றே, தன் னொருமைப்பொருளுணர்த்துமன்றித், தனித்து

நின்று தன்பொருள் உணர்த்தாது என்பது பெறப்படும். படவே நடந்தது என்புழித் துவ்விகுதி நட என்னும் முதனிலைவினையோடுகூடித் தன் னொருமைப்பொருளுணர்த்தினாற்போலவே, அது உருபும் தன்னை யேற்கும் பெயரோடுகூடிச் சாத்தனது என நின்றே ஒருமைப்பொருளுணர்த்துமென்பது துணிபாம். ஆகவே ஆண்டு அதுஉருபு ஒருமையுணர்த்துங்கால் முற்றாயேனும், பெயராயேனும் நின்றே உணர்த்துவதல்லது, பிறவாறு உணர்த்தமாட்டாது என்பதும் துணிபாயிற்று. தொல்காப்பியர் "அதுச்சொல் வேற்றுமை யுடைமையானும்" என்னுஞ் சூத்திரத்தினால் ஆறும்வேற்றுமை உடைமைப்பொருள்பற்றியும் குறிப்பு முற்றுப் பிறக்குமென்றலின், 'சாத்தனது' என்னும் முற்றாய் உருபே வேறுபட்டுநின்றதென்பது பெறப்படுதலின், 'சாத்தனது' என்னும் பெயராயும் உருபு வேறுபடுமென்பது பெறப்படும். இதனை அச்சூத்திர வுரையில், நச்சினார்க்கினியர், "உடைமைப்பொருளாவது:—ஒன்றற்கு ஒன்றை உரிமைசெய்துநிற்பது. அஃது இப்பொருளினுடையது இப்பொருளென்றும், இப்பொருள் இப்பொருளினுடையதாயிருந்தது என்றும், இப்பொருளையுடையதாயிருந்தது இப்பொருளென்றும் மூன்றுவகைப்படும். அவை முறையே, 'சாத்தனதாடை' என ஆற னுருபாயும், 'ஆடை சாத்தனது' எனவும், 'குழையன் கச்சினன்' என வும் வினைக்குறிப்பாயும் நிற்கும். உருபு உணர்த்தும்வழி ஆடை முத லியன முன்னிற்குமாறும், குறிப்பு உணர்த்தும்வழி ஆடைமுதலியன பின்னிற்குமாறும் உணர்க." எனக் கூறுமாற்றானும் ஓர்ந்துணர்ந்து கொள்க. சாத்தனதாடை என்றவழி, அது உருபென்றதன்றிப் பெய ரென்று நச்சினார்க்கினியர்கூறிற்றிலராலெனின், "இறுதியுமிடையும்" என்னும் வேற்றுமைமயங்கியற்சூத்திரவுரையின்கண் "சாத்தனதாடை" என்புழி "'அது'வென்பதுபெயராய்நிற்கும்" எனக் கூறினாராதலின் ஈண்டுக் கூறிற்றிலரென்க.

இன்னும், ஆறனுருபு இவ்வாறு பெயராய்நிற்கும் என்னுங் கருத் துப்பற்றியே சேனாவரையரும், மேற்காட்டிய "இறுதியுமிடையும்" என் னுஞ் சூத்திரவுரையின்கண் "ஆறாவதும் ஏழாவதும் 'சாத்தனதாடை' 'குன்றத்தின்கட் கூகை' என இடைநின்று தம்பொருளுணர்த்தினாற் போல 'ஆடை சாத்தனது' 'கூகை குன்றத்துக்கண்' என இறுதிநின்ற வழி அப்பொருளுணர்த்தாமையான் அவ்வுருபுகள் ஆண்டு வரையப்

படும். ஆறனுருபேற்றபெயர் உருபோடுகூடிப் பெயராயும் வினைக் குறிப்பாயும் நிற்றலுடைமையான் அங்கிலக்கண் ஆடை சாத்தனது என இறுதிக்கண்ணு நிற்குமென்பது" எனக் கூறினர். முற்று அது உருபிற்குக்கூறிய உடைமைப்பொருளுணர்த்திவருதலினற்றான் சாத் தனது ஆடை என்பது ஆடை சாத்தனது என நிற்குமென்று இளம் பூரணரும் உதாரணங்காட்டினர். முற்றாய்நிற்கும் சாத்தனது என்பது, சாத்தனதாடை என நிற்குங்கால் வருமொழியோடு பிளவுபட்டு ஒலித்துநிற்கும் என்பதும், பெயராய்நிற்கும் சாத்தனது என்பது வரு மொழியோடு பிளவுபடாது ஒன்றுபட்டொலித்துநிற்குமென்பதும் உணர்ந்துகொள்க.

இனிச் சாத்தனது ஆடை என்புழிவரும் 'அது' தொக்கு, சாத்த னாடை என நின்றவழியும், சாத்தனுடைய பொருளாகிய ஆடை என் னும் விரிப்பொருடருதற் கேற்புடைமை கண்டே, சாத்தனது ஆடை என்பதை விரியென்றும், சாத்தனாடை என்பதைத் தொகை என்றும் ஆசிரியர் வழங்கினர்போலும். இவ்வழக்கு, இவ்வழக்கை உணர்ந்துரைத்த தொல்லாசிரியர்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படலரிதென்க. இஃதுணர்ந் தே பிறிதுபிறிதேற்றலும் வழக்குநெறி என்பதை உணர்த்துதற்குப் "பிறிதுபிறிதேற்றலும்......நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப" என் ஞர் தொல்காப்பியரும்.

அற்றேல், சாத்தனதுஆடை என்புழிச் சாத்தனது என்பது பெயர்ப்பொருடரின் அது, பண்புத்தொகையாமன்றேவெனின், ஆகாது. என்னை? சாத்தனது ஆடை என்னும் ஆறாம்வேற்றுமைத்தொகை இதனது இது என்னும் பொருள்படவருதலானும் பண்புத்தொகை இன் னது இது என்னும் பொருள்படவருதலானு மென்பது. இவ்வேறுபா டுணர்ந்துகோடற்கே தொல்காப்பியர் ஆறாம்வேற்றுமைச்சூத்திரத்து இதனது இது என்றும், பண்புத்தொகைச்சூத்திரத்து இன்னது இது என்றும் விதந்துகூறினரென்பது. அங்ஙனேல், சாத்தனது என்பது உடைப்பொருளையும் உணர்த்திநிற்றலின் ஆடையோடுதொடரவேண்டிய தின்றெனின், அற்றன்று. அது, உடைப்பொருளைப் பொதுவாகத் தெரித்துநின்றதன்றிச் சிறப்பாகத் தெரித்தில்லாமையின் இது என்ச் சிறப்பாக உணர ஆடையோடு தொடர்ந்தேநிற்றல்வேண்டுமென் பது. இதனல் ஆறாம்வேற்றுமையை இவ்வாறு கொள்ளும்வழக்கு,

தமிழ்வழக்கென்பது உணர்க்கிடக்கின்றது..' என்னை? வடநூலார் ஆறும்வேற்றுமைவிரியை (ராமஸ்ய வஸ்த்ரம்) இராமனுடைய ஆடையென்றும், தமிழ்நூலார் இராமனது ஆடைஎன்றும் கோடலின். அது என்பதற்கு உடைய எனப் பொருள்கொள்ளின் இம்மாறுபாடு ஒன்றும் வாராதேயெனின் அது பொருந்தாது. என்னை? தமிழ்நூலார் உருபிற்கு ஒருமை பன்மை கூறினமையின். இதனை முன்னும் உரைத்தாம். ஆகையால் வடமொழியில்வரும் ஆறும்வேற்றுமைக்கும் தமிழில்வரும் ஆறும்வேற்றுமைக்கும் சிறிது வேறுபாடுண்டென அறிந்துகொள்க.

இங்ஙனமாக, சிவஞானமுனிவரைப் பின்பற்றியே, உருபு உருபேலாதென்றும், பெயருருபேற்றலின்கண் மாறுபாடின்றாதலின் அது கூறல் வேண்டியதின்றென்றும் தொல்காப்பியச்சொல்லதிகாரக் குறிப்பாசிரியர் கூறினார் என்பது எனது அபிப்பிராயம். சிவஞானமுனிவர், "இதனது இது" என்றும், "இதனது இது விற்று" என்றுந் தொல்காப்பியர்கூறிய தொடர்களின் பொருள்களை நுண்மையாக ஆராய்ந்துணர்ந்திருப்பரேல், பிறிது பிறிதேற்கமாட்டாதெனக்கூறுதற்கு எழுந்திருக்க மாட்டார் என்பது என்றுணிபு.

இதுகாறுங் கூறியவாற்றாற் போந்தபொருள் யாவையோ எனின், ஆறும்வேற்றுமை அது உருபு ஒருமைப்பொருடரும் என ஆசிரியர் ஓதுதலின் அது பெயர்சார்ந்தே ஒருமைப் பொருடரும் என்பதூஉம், தருங்கால் சாத்தனது என்பது சாத்தனுடையது எனப் பொருடந்தே ஒருமையுணர்த்துமென்பதூஉம், சாத்தனுடைய எனப் பொருடரின் ஒருமை உணர்த்தா தென்பதூஉம், சாத்தனுடையது என்பதற்குச் சாத்தனுடையபொருள் என்பதே பொருள் என்பதூஉம், சாத்தனது ஆடை என்புழிச் சாத்தனது என்பதற்கு மதுவே பொருளென்பதூஉம், அதுபோலவே சாத்தனதனை என்புழியும் சாத்தனுடைய பொருள் என்பதே பொருள் என்பதூஉம், பொருள் அதுவாதலாற்றான் உரையாசிரியர்கள் மூவரும் "பிறிதுபிறி தேற்றலும்" என்பதற்கு ஆறனுருபு பிறிதுருபேற்றலும் எனப் பொருள் கூறினார்களென்பதூஉம் அதனால் அவருரைக்கண் யாதுந் தடையில்லை யென்பதூஉம் பிறவுமென்க.

சி. கணேசையர்.

ஸ்ரீ:

குருபரம்பரை

எம்பெருமானார்வைபவம்.

[௨௬-ம் தொகுதியின் ௫௪௨-ம் பக்கத்தொடர்ச்சி.]

ஆங்கதிலொருநாள்வண்டர்சொண்டரையுமாசறுமுடையவருடைய
பூங்கழலிணையிலாசரிப்பித்துப்பூபதிசேவகத்தொழிலுக்
கோங்குழுவர்க்குங்கொடுத்திடுமுடைமையனைத்தையுமுடையவர்திருமுன்
பாங்குடனமைத்துப்பணிந்தனர்பிள்ளைபழிப்பிலாவெதிகணாயகனும். (௫௧௬)

ஆசையொன்றேடுந்துவக்கறவிருந்தாங்கணியரங்கத்திலேழகத்தின்
மாசறுமாதுகாமுவந்தருந்திவாழுவார்மற்றிவருகந்து
நேசமோடளித்ததிரவியமதனைநீக்குதல்பழுதெனநினைந்தாங்
கீசனார்க்கினியதொண்டரையமுதுசெய்வித்தாங்கேழுலகிறைஞ்ச. (௫௧௭)

மன்னிஞன்முன்னாட்சுமித்திரையிடத்தில்வந்தவதரித்தவன்மன்னன்
முன்னுறவளித்ததிரவியமனைத்துமுறைமையாற்பிள்ளையுங்கொணர்ந்து
பன்னரும்பகலுமளித்திடவதனாற்பாகவதக்குழாமுவந்தாங்
கின்னமுதருந்தவாழ்ந்தனனவணம்வாழுநாளெதிகளுக்கிறைவன். (௫௧௮)

வேறு.

பிள்ளையுறங்காவிலிதாசர்பேராயிரத்தானினிதமரு
முள்ளநோக்கியன்புமிகுந்தருகுங்கருணையானந்த
வெள்ளமாறுதருவிசொரிவிழியைநோக்கிவிட்டகன்ற
கள்ளநோக்கினாடோறுங்கசிந்தசிந்தையுடையவரும். (௫௧௯)

நிலத்தினடந்துகாவிரியினீராடத்தாம்போம்பொழுது
குலத்தினுயர்ந்தசாத்தினபேர்கோகனகக்கைபிடித்தேகி
நலத்தின்மிக்கார்புனலாடிமீளும்போதுஞானத்தின்
புலத்தின்மிக்கபிள்ளைதிருக்கையைப்பிடித்தேபோதுவரால். (௬00)

ஓதியபலநாளிந்தவொழுங்கவணிகழக்கண்டு
சாதியிற்றலைமையாயதலைமையந்தணர்களெல்லா
நீதியிவ்வுலகுக்கெல்லாநிறுத்தியவெந்தையார்க்கு
வேதியர்பரிசந்தன்னின்மிக்கதோவுறங்காவில்லி. (௬0௧)

எண்ணெண்கச்சையழுக்குடம்பங்கெடுத்துக்கட்டுந்தொபபாரம்?
பெண்ணைப்பிரியாவுள்ளன்புபெருநீர்சூழ்ந்துகிடந்திடுமிம்
மண்ணைப்பொருளென்றுறவாழுமன்னன்சேவைவருந்தொழில்கள்
கண்ணையருளினுயிர்செகுக்கும்வாளைப்பிரியாக்கரப்பரிசம். (௬0௨)

என்னநினைந்துசாத்தினபேரெல்லாமொன்றாயுடன்கூடிப்
பின்னமின்றியுடையவர்பாற்பேசவஞ்சிச்சிலபகல்கள்
மன்னவொருநாட்கந்தாடைமுதலியாண்டான்வந்திறைஞ்சி
அன்னமூர்திதிருத்தாதையாவியன்னுயெனப்போற்றி. (௬0௩)

நின்றானவணநின்றவனைநிகரிலாதவுடையவரு
மொன்றுகேட்பான்போனின்றாய்முதலியாண்டானுரையென்றார்
நன்றுகேளென்னுயிர்நாதாநலத்தான்மிகுந்தவேதியரா
யின்றுன்தொண்டராயுள்ளாரிலங்குதிருக்கைதரநீயும். (௬0௪)

வேறு.

நீராடவெழுந்தருளிநீமீளவருமளவிற்
பேராசையுடைத்தொண்டர்பின்முன்வரப்பிள்ளைகரந்
தாராநின்றானுனக்குச்சாத்தாதானெனவொன்று
மோராதேநீபிடித்துவருதிறத்தையுரையென்றான். (௬0௫)

வேறு.

அத்திறத்தைக்கேட்டருளியாசிலாதவுடையவரும்
பத்துவார்த்தையெடுத்தங்ஙன்பழுதிலாதவாண்டான்சீர்ச்
சித்தந்தெளியக்கட்டுரைத்தான்சிலநாளவணஞ்செல்வளவி
லொத்திவ்வுலகையாண்மன்னனுறையூர்நின்றுமொருகானில். (௬0௬)

ஒப்பிலாதான்வேட்டைக்கங்கொருநாளேகவிடம்வல்மும்
தப்பொன்றில்லாவண்டர்சொண்டர்சாரப்பிள்ளைபின்செல்ல
வப்போதவர்கள்முன்னாகச்சமணர்கோயிலாங்கிரண்டு
மிப்பார்தன்னிலெழுந்தோங்கவிறைவனதனையறிந்திருந்தே. (௬0௭)

மறைத்துத்திருமால்கோயிலிதுவணங்கும்வண்டர்சொண்டரென
நிறைத்தமெய்யருடன்கூறநீண்டவிமானத்தரிகண்டாங்
குறைத்தநிலைமைமைந்தர்களுமுடனேபணிந்தாரப்பொழுதிற்
பொறைத்திண்பாராண்மன்னவனும்பொய்பொய்சமணர்புகதெய்வம். (௬0௮)

தன்னைத்திருமாதிருத்தொண்டர்தாழ்ந்துபணிந்தாரெனச்சிரித்தான்
அன்னைபிதாவுமரியன்றியறியாமைந்தரதுகேட்டு

முன்னைவினையேமுடித்ததெனமுடிந்தாராவிமுற்றுமற
மன்னைச்சூழ்ந்தாரெழுந்திருமினென்றார்மைந்தர்மாய்ந்ததிறம். (சு0க)

அறியாநிலையார்கட்டுரைப்பவர்களெழாதபடிகண்டு
நெறியார்மன்னனருகணைந்துநின்றுநோக்கியுயிருடம்பைப்
பிறியாநிற்கும்படிகண்டுபெருகவருந்தித்துன்புற்று
வெறியார்துழாயான்றனக்கினியபிள்ளைக்கிதனைவிளம்புகென. (சுக0)

ஆயதொழில்களிவைமுற்றுமறிந்தானொருவன்றனைவிடுப்பத்
தூயசிந்தையுறங்காதவில்லிகேட்டுத்தோமில்லா
மாயன்றமர்களடிப்பொடியேமற்றிம்மைந்தர்தமைமாய்க்கும்
நோயையரியுமருந்தென்னநோக்கிநின்றந்நோய்தீர. (சுகக)

தன்னுடைப்பாதப்போதாற்றடவினன்கேசாந்தங்கள்
முன்னுடலாவிநீங்கமோகமுற்றடங்குமைந்தர்
மன்னனுங்காணத்துண்ணென்றெழுந்தனர்மாலைவாழ்த்தி
யென்னவர்திறத்தைவாக்காலிசைப்பதீங்கெளியேனந்தோ. (சுகஉ)

அரசனத்திறத்தைநோக்கியஞ்சிநின்றுவிவாதி
உரைசெய்த்தகாதின்றிந்தவுத்தமர்பரிசென்றுன்னி
நிரைசெயும்மூவர்தம்மைநேர்பெறநோக்கிநீங்கள்
புரையுறுமெம்மைச்சேவித்திடுதலிப்பொழுதேபூரை. (சுகங)

ஏதங்கடிந்ததிருவரங்கத்திருமினின்றேயுங்களுக்கு
மாதந்தோறும்பெறுமுடைமைமாசிலாதீர்வரவிடுவேன்
வேதமுடிவையுணர்ந்தவர்களுடனேசென்றுவீற்றிருமென்
றோதுந்திறத்தைமூவர்களுங்கேட்டாங்குடனேபுறப்பட்டு. (சுகச)

வேறு.

பொன்னரங்கத்திற்புகுந்துடையவர்க்கப்பூபதிபகர்ந்தமையனைத்தும்
முன்னுறவுரைத்தாங்குடையவர்வியப்பமூண்டநோயனைத்தையுந்தப்பி
மன்னினார்மாதமொன்றவண்செல்லமற்றையம்மாதத்தில்வரும்பொன்
மின்னுமாமௌலிவேந்தனுங்கொடுத்துவிட்டனன்விரைவினிற்கொணர்ந்தார். ()

கொண்டுவந்தவர்கள்பிள்ளைமுன்னந்தக்குறைவறுதனத்தைவைத்திறைஞ்சப்
பண்டுபோற்பிள்ளையத்தனந்தன்னைப்பரமதேசிகன்முன்பில்வைப்பக்
கண்டிவையாகாதினியெனவெதிகள்காரணன்பகர்ந்தனனதுகேட்
டண்டர்நாயகனேயெதன்பொருட்டிதனையகற்றுதலுரையெனவறைவார். ()

மாசிலாநிலையீரிராசசொம்மாமோமற்றநம்மிடத்திலென்றுரைப்பத்
தேசிகாமுன்னம்வந்தபொன்னெல்லாந்தேசமாண்மன்னனதன்றே
சிசியென்றதனையிப்பொழுதிகழ்ந்ததிறத்தினைச்செப்புதியென்று
ரீசனுக்கினியவெதிகளுக்கிறைவன்கேளுமென்றிசைக்கலுற்றனனால். (௬௧௭)

முன்பெலாநீங்கள்மூவருமன்னன்மொழிந்தனபணிசெய்துமுடிப்பப்
பின்பவனல்கப்பெருந்தனம்வேர்ப்புவழித்துறப்பெற்றுளீரதனால்
அன்புமிக்குடையதொண்டருக்கதனைக்கொண்டுநாமமுதுசெய்வித்தோந்
துன்பகன்றிருந்தீரிப்பொழுதமக்குமிதுக்குமென்றுரந்தநீர்சொல்லீர். (௬௧௮)

என்றுரைத்தருளவொக்குமென்றிறைஞ்சியெய்தினர்தம்மொடுந்தாங்கள்
சென்றுமன்னவன்முன்றனத்தைவைத்ம தங்கடேசிகன்றிருக்கையாற்றொடாதே
யின்றிதையிகழ்ந்தானெமக்குமீதாகாதிராசசொஞ்சேவியாதெடுத்தல்
குன்றனதோளாய்பிழையெனவுரைப்பக்கொற்றவன்மற்றவர்க்குரைப்பான். ()

என்னைநீரின்றுங்கும்முடன்கொடுபோயிருந்துநுந்தேசிகர்திலதந்
தன்னைநான்வணங்கும்படியொருசகாயந்தருதிரோதவமிகுந்துயர்ந்த
நன்னலமுடையீரென்றுமன்னுரைப்பநவையிலார்வருகெனக்கொடுபோய்த்
தென்னரங்கத்துட்புகுந்தெதிராசன்றிருமுனில்விடுத்தனர்திறல்வேல். (௬௨௦)

அரசனும்வணங்கிநின்றனனெதிகட்கதிபனுமரசனைநோக்கி
விரைசெய்தார்மவுலிவேந்தநீம்பாற்புகுந்தமைதன்னையும்விளங்க
வுரைசெயென்றுரைப்பமன்னனுமிறைஞ்சியுத்தமர்தம்மிலுத்தமனே
புரையறநினக்கின்றடிமையாயுய்யும்பொருளினைநினைந்துபோந்தனனால் (௬௨௧)

நன்றெனவந்தவரசனுக்கிரங்கிஞானநாயகனருள்செய்து
வென்றியந்திகிரியரங்கனுக்கந்தவேந்தனைக்கொண்டுபல்லூர்கள்
அன்றறவிடுவித்தன்பர்கள்புகழவாசறுதிங்களுநாளு
மொன்றியதிருவின்விழாவருவண்ணமோங்குசீரரங்கனுக்காக்கி. (௬௨௨)

மன்னுநாளந்தமன்னவன்வந்துமாசிலாவெதிகணாயகனார்
பொன்னடிவணங்கித்தேவரீரிந்தப்பூம்பொழிலரங்கனாருடைய
முன்னுறநிகழுங்கருமங்களனைத்துமுறையினானோக்கியக்கோயி
றன்னையும்பரித்துவரும்வரமருள்கதமியனேற்கெனச்சரண்டாழ்ந்தான். (௬௨௩)

அப்படிபகர்ந்தாங்கடியிணைதொழுதவரசனையெம்பிரானோக்கிச்
செப்புதியிப்போதுதித்ததென்பொருட்டாற்செப்பினதென்றனனரசன்
உப்புவாணியர்கள்கற்புரவிலையினூறுநெறியறிவரோபாலன்
றப்பறத்தவழும்பருவம்பொற்கிண்ணத்தாமறிந்திடுங்கொலோதலைவா. (௬௨௪)

மாசறுமலடிபிள்ளைவேதனையின்வருத்தமொன்றறிவளோவிறைவா
தேசுறுகவிஞனருமையைமூடத்திரள்களாற்செப்பிடப்போமோ
ஆசுறுமணியையேகடியல்லாதறிவதார்புத்திரர்நேயந்
தேசுற்ப்பெற்றதந்தைதாய்க்கன்றிச்சிநேகத்தினருமைகள்தெரியா. (௬௨௫)

ஆங்கவைபோலவித்திருநகரிலச்சுதன்றனக்குனையல்லாற்
பாங்குறவறிந்துசோடசகன்மம்பத்தியோடளிப்பதார்பகரிற்
பூங்கமலக்கண்வளர்பவன்றன்னைப்பொருளெனவுணர்வதார்புவியிற்
றூங்குநற்குணத்தாய்மண்ணவரெல்லாந்தடையறுமத்தகாமத்தில். (௬௨௬)

நின்றழிந்திடுவார்க்குன்னுடைக்கடவுணிலைமையுமருமையுந்தெரியா
தென்றனக்குரைத்தேனெம்பிரானீயேயாவையுந்துறைதுறைதோறுஞ்
சென்றுறநோக்கித்திருவரங்கத்திற்செல்வர்தந்திருவுளப்படியே
யொன்றிநின்றிடுகவென்றனனரசனுடையவர்கேட்டுளமுருகி. (௬௨௭)

செப்பருமன்னனுரைத்திடுந்திறத்திற்றிருவுளமகிழ்ந்தவனோடும்
அப்படிசெய்யக்கடவதென்றெழுந்தாங்காசறுகோயிலுட்புகுந்தோ
ரொப்பிலான்பரித்துச்சிலபகல்செல்லவோங்குமத்தானத்திலுள்ளார்
தப்புறநடக்கும்படிகள்கண்டவருந்தடுத்திடச்சத்துருவாகி. (௬௨௮)

ஈங்கிவன்றன்னைக்கொல்லுதற்குபாயமென்னெனநினைந்தினையில்லா
ரோங்குசீர்மாதுகரத்தினுக்கென்றேயுற்றநம்வாசலில்வந்தாற்
றீங்குறவிடத்தைச்சோற்றொடுங்கலந்துதிரட்டியக்கூடையிலிட்டாற்
பூங்குடன்புசித்துமற்றிவனசிக்கிற்பகையிலையெமக்கெனப்பலரும். (௬௨௯)

நண்ணியோரிடத்திலத்திறம்பகரநானதுசெய்கின்றேனென்னத்
திண்ணியோனொருவன்றன்னகம்புகுந்துதேவியோடுரைப்பனீநாளை
யெண்ணியமாதுகரத்தினுக்கிங்கேயெதிகளுக்கதிபனும்புகுவன்
புண்ணியபூவடிமண்ணிலமயிலேபொருக்கெனச்சோற்றொடுநஞ்சை. (௬௩௦)

உறக்கலந்திடுதியென்றனனவளுமுடையவர்புக்கலாசரித்தாங்
கறப்பொருளுணர்ந்தானாதலாலந்தோவவர்க்குநானஞ்சிடலாமோ
பிறப்பெனுங்கடலைக்கடத்தியதலைவன்பேதையேனுருயிர்நாதன்
மறப்பதேயுமக்குநலனிறையென்றுண்மலர்மிசைத்திருமகளனையாள். (௬௩௧)

நஞ்சநானவனுக்கிடேனெனவுரைத்தவையறுமுரையினைக்கேட்டு
வெஞ்சினமுடையவரக்கரைநிகர்ப்பான்மெல்லியறனையுறக்குமைத்துக்
கஞ்சமாமலர்க்கைதன்னிலந்நஞ்சைக்கதுமெனவிட்டிதைச்சோற்றிற்
பஞ்சின்மெல்லடியாய்கலந்துறவிடுதியிடாயெனிலுன்னையும்படுப்பேன். (௬௩௨)

என்றனனந்தப்பாதகனஞ்சியேந்திழையாளதைச்சேர்ற்றி
லன்றுறத்திரட்டியெதிகணுயகனுரணைந்தபோதழுகணீர்மழைக
ணின்றுறப்பொழியச்சென்றெதிர்செறிந்துநிகரிலான்றிருக்கையிலிருக்கு
மொன்றியவமுதக்கூடையிலாங்கோர்மருங்கினிலொதுங்கவிட்டகன்றாள். ()

அத்திறங்கண்டங்கெதிகணுயகனுராயிழைநாமிவணணைந்தால்
மெய்த்திறமாதுகரம்பரிமாறவிரைவினில்வரும்பொழுதெல்லாம்
பொய்த்திறமறத்தான்வணங்கியிட்டேகும்புழுதியிற்புரண்டமெய்யோடு
மெத்திறத்தாலோவழுகணீரோடுமெமக்கிடுமின்னமுதத்தை. (௬௰௪)

பிடித்தநாம்பிடித்தகூடையின்மருங்கிற்பேதமையோடுமிட்டகன்று
ளடித்ததுண்டிவளைத்தாரமாயுடையானரிப்பினுக்கஞ்சியோருபாயந்
துடிப்பொருவிடையாள்செய்ததுண்டிந்தச்சோற்றினிற்றூற்றுவித்தகன்று
ணடிப்புறமுலகைநம்புதலரிதுநாமிதுசோதிக்கவேண்டும். (௬௰௫)

என்றெதிராசன்மடத்தினிற்சென்றங்கேந்திழையாளிட்டவிடத்தோ
டொன்றியசோற்றுப்பிடியினையெடுத்தாங்கும்பனுய்விடுகநீயென்ன
நின்றதோர்நாய்முன்னிட்டனனதனைநேர்பெறத்தின்றுநீணிலத்தி
லன்றுடறவிர்ந்துவிசும்படைந்தந்நாயமரரோடுறவெனையாண்டான். (௬௰௬)

இந்தமாநிலத்தில்யாவரேயந்தோவிரப்பவரிறப்பநஞ்சிடுவார்
முந்தைநாளுள்ளகதையினுங்கேளோமூவுலகத்தினுமில்லை
தந்தைதாயனையாரித்திறஞ்செய்யத்தக்கதோநமக்கெனச்சலித்து
நொந்துமாமலர்க்கண்புனறரநின்றுனோற்றநோன்புடையவர்தலைவன். (௬௰௭)

சிலபலகடிகையவ்வணமிருந்துசிந்தையில்வருந்தித்தற்சார்ந்த
புலவர்கட்கெல்லாமத்திறம்பகர்ந்துபூமியில்வர்முதலர்ந்து
மலமறுபாத்தையுணர்ந்தவர்க்கென்னமற்றவரோடுரைசெய்து
நல்முறுமமுதுசெய்குதறவிர்ந்துநாள்பலவுவவதித்திருந்தார். (௬௰௮)

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

பொன்மாளிகைத்துஞ்சினதேவர்.

பிற்காலச் சோழர்களிலே ஒரு சோழ அரசன்பெயர் பொன் மாளிகைத்துஞ்சினதேவர் என்று கல்வெட்டுக்களிற் காணப்படுகிறது. அந்தப்பெயரைத் தரித்தவன் இன்னனென்று காட்டுவதற்குத் தகுதி யான சாதனங்கள் இதுவரையிற் கிடைத்தில. ஆனல் அவன் சுந்தர சோழன் எனச் சிறப்புப்பெயர்பெற்ற இரண்டாம் பராந்தகனுகவேண்டு மென்பது பலரது அபிப்பிராயம். இவ்வெண்ணம் முதன்முதல் திருவல்லிக்கேணியிலிருந்த எம். நாராயணசுவாமி ஐயரவர்கட்கு உண்டா யிற்று. அவர் செந்தமிழ் மூன்றுவது தொகுதியிலே திருப்பதியில் தாம் கண்ட சில கல்வெட்டுக்களைப் பதிக்கும்போது அக்கல்வெட்டிற் காணப்படும் பொன்மாளிகையில்துஞ்சினன் என்பது இரண்டாம் பராந்தகனைக் குறிக்குமென்ருர். அச்சாசனம் வருமாறு:—

"திருமகள்போலப் பெருநிலச் செல்வியும் தனக்கென உரிமை பூண்ட மனக் கொள காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி வேங்கை நாடும் நுளம்பப் பாடியும் கங்கபாடியும் தடிகை வழியும் குடமலை நாடும் கொல்லா புரமும் கலிங்கமும் திண்டிறல் வென்றிதண்டாற் கொண்டதன் னெழில் வளரூழியு ளெல்லா யாண்டும் செழுதக பின்வரும் ஆண்டே செழியரைத் தேசு கொள் கோராஜ ராஜகேசரி பன்மற்கு யாண்டு ௧௬-வது சோமானுர் மகளர் பொன் மாளிகைத்துஞ்சினன்தேவியார் தேவி அம்மனுர் திருவேங்கட தேவற்கு இட்ட பட்டம் 3-ம் குடிலைக் கல்லாற் பொன்......................த்தில் முத்தின் மாணிக்கம் உ-ம் தடவிக்கட்டின மாணிக்கம் ஆறும் வயிரம் நாலும் முத்து இருபத்தெட்டும்; இப்பட்டம் இட்டார் பராந்தக தேவி அம்மன் உ."

இக்கல்வெட்டுப் பதிப்பித்தகாலம் 1904-ம் ஆண்டு.

II. 1910-ம் ஆண்டு வாக்கில் சோழவமிசசரித்திரச் சுருக்கம் எழுதின து. அ. கோபிநாத ராவ் அவர்கள் தமது புத்தகம் 12 வது பக் கத்தில்,

"இவ்வரசனை (பராந்தகன் II) இவன் பிரஜைகள் மனுவின் அவதார மென்று பாவித்துவந்தார்கள். இவன்மனைவி கேரளராஜன்மகள். இவள் பெயர் வானவன் மாதேவி. தன்கணவன் பராந்தக னிறந்ததும் வானவன் மாதேவி ஸகமனஞ்செய்தாள். பராந்தகனுக்குப் "பொன்மாளிகைத்துஞ்சிய தேவர்" என்ருேர் காரணப்பெயருமுண்டு."

என்று எழுதி, இதற்கு ஆதாரம் செந்தமிழ்த்தொகுதி ௩- பக்கம் ககூடு என்று காட்டினர்.

III. 1891-ம் ஆண்டிலே வெளிப்படுத்தப்பட்ட தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் இரண்டாம் காண்டம் ஆறுவது இலக்கக்கல்வெட்டில் பொன்மாளிகைத்துஞ்சினதேவர்பெயர் இரண்டிடங்களிற் காணப்படுகின்றது. இக்கல்வெட்டின் முகவுரையில் டாக்டர் உல்ஷ், 'பொன்மாளிகைத் துஞ்சினதேவர் திருமேனி'[1] என்று சொல்லிச் சென்றாரேயொழிய அவர் இந்தப் பொன்மாளிகையில் துஞ்சினன் யார் என்று எழுதவில்லை. ஆனால் மொழிபெயர்ப்பில் 'பொன்னம்பலத்திற் பள்ளி கொண்டதேவர்' என்று கொண்டார்.

IV. தென்னிந்தியக்கல்வெட்டுக்கள் இரண்டாங் காண்டத்திற்கு முகவுரை எழுதிய ராய்பகதூர் வி. வெங்கையா அவர்கள் தமது முகவுரை ஆரம்பத்திலேயே,

"(சிதம்பரத்திலுள்ள கோயில் என்று கூறும்) "பொற்சபையில் இறந்த அரசன்" என்ற பொருளைக் கொண்டுள்ள பொன்மாளிகைத்துஞ்சினதேவர் என்று பேர்பெற்ற சோழவரசன் சுந்தரசோழன் இரண்டாம் பராந்தகனின் இரண்டாவது புத்திரன் இராஜகேசரிவர்மன் மும்மடிச்சோழன்"

என்றும், மூன்றாங் கீழ்க்குறிப்பில்

"1908-ம் ஆண்டு 302 கிம்பர் கல்வெட்டு, பொன் [மாளிகைத்துஞ்சின தேவரான] சுந்தரசோழரது அரசாட்சியைக் குறிக்கிறது; இராஜராஜனது 26-ம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் (1896-ம் ஆண்டு 116 நிம்பர்) பொன் மாளிகைத்துஞ்சினதேவரது ஒன்பதாமாண்டு குறிக்கப்படுகிறது; இவன் இராஜராஜனது தகப்பனைத் தவிர வேறொருவனுக்விருக்க் வியலாது"[2]

என்றும் எழுதினர்கள்.

---

[1] To the image of Ponmaligaittunjina-devar (paragraph 14) S. I. I II p. 68.

[2] S. I. I. II. part 5. Introduction page 1. Rajakesarivarman mummadi Sola was the second son of the Chola King Parantaka II *alias* Sundara-Chola who was also known as Ponmaligaithunjina Deva, "the king who died at the golden hall" (*i. e.*, the temple Chidambaram) No 302 of 1908 refers itself to the reign of King Sundara-Chola *alias* [Ponmaligaithunjinadeva]. In a record of the Twenty-Seventh year of Raja-Raja I (No. 116 of 1896), the ninth year of a Ponmaligaithunjinadeva is referred to. This King can be no other than Rajaraja's father Sundara-Chola.

V. 1918-19-ம் ஆண்டுக் கல்வெட்டு அறிக்கையில் 1919-ம் ஆண்டில் தாதாபுரம் என்ற ஊரில் ஒற்றடம் எடுத்த 8, 10, 17-நிம்பர் கல்வெட்டுக்களைப் பற்றி யெழுதுகையில் இக்கல்வெட்டுக்களினுற் பொன் மாளிகைத்துஞ்சினதேவர் சுந்தரசோழனுன இரண்டாம் பராந்தகன் என்பது உறுதிபெறுகிறதென்று எழுதினர்கள். அக்கல்வெட்டுக்க ளின் பகுதிகள் வருமாறு:—

19-ம் ஆண்டு 8நீ.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே யுரிமை பூண்ட மனக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கைநாடும் நுளம்பப் பாடியும் கங்கபாடியும் தடிகை வழியும் குடமலை நாடும் கொல்லாபுரமும் கலிங்க மும் திண்டிறல் வென்றி தண்டாற் கொண்ட தன்னெழில் வளர வாழியு ளெல்லா வாண்டுஞ் செழுதக பின்னரும் ஆண்டே செழியரைத் தேசுகொள்கோ ராஜகேசரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு இருபத்தொன்ருவது வெண் குன்றக் கோட்டத்து நல்லூர்நாட்டு நகரம் ராஜராஜபுரத்து பொன்மாளிகை யிற்றுஞ்சின தேவர் திருமகளார் ஸ்ரீபராந்தகன் குந்தவைப் பிராட்டியார் எடுப் பித்தருளின ஸ்ரீ இரவிகுலமாணிக்கஈசுவரத்து."

19-ம். ஆண்டு 10நீ.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போல........................ ....தேசு கொள் கோ ராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தைந்தாவது வெண்குன்றநாட்டு நல்லூர்நாட்டு ராஜராஜபுரத்து பொன்மாளிகையிற்றுஞ் சினதேவர் திருமகளார் ஸ்ரீபராந்தகன் குந்தவைப் பிராட்டியார்......"

19-ம் ஆண்டு 17 நீர்.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போல பெருநில.. ....யாண்டே தேசுகொள்கோ ராஜகேசரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்ருவது வெண்குன்ற நாட்டு நகரம் இராஜராஜபுரத்து உடையார் பொன்மாளிகைத் துஞ்சின தேவர் திருமகளார் ஸ்ரீபராந்தகன் குந்தவைப்பிராட்டியார் எடுப்பித்த ...."

இவைகளை யொட்டியே 1925-26-ம் ஆண்டு அறிக்கையில், 'சிதம்பரத்தி லுள்ள பொன்மாளிகையில் துஞ்சினதேவரென்று சுந்தரசோழனுக்குப் பெயருண்டு என்பதை நினைப்பிலிருக்கவேண்டும்'[3] என்றெழுதினர்கள்.

[3] Epi report for 1925-26 p. 100.

மேற்கூறியவைகளெல்லாம் ஒன்றற்கொன்று சம்பந்தமுடையனவா என ஈண்டுக் கவனிப்போம். திருவல்லிக்கேணி நாராயணசாமி ஐயரவர்கள் கொடுத்த கல்வெட்டிற் பொன்மாளிகைத்துஞ்சினான் மனைவியார் தேவி அம்மனார் என்றும், இவள் சேரன்மகள் என்றும் அறிகிறோமே யன்றி வேறொன்றும் புலப்படவில்லை. நாராயணசாமி ஐயரவர்கள் எழுதியதை ஆதாரமாக வைத்துக்கொண்டே கோபிநாதராவ் சொன்னாரென்று மேலேகாட்டியிருப்பதால் அவருக்கெனத் தனிக்கொள்கை யில்லையென்றேற்படுகிறது. அதுபோலவே டாக்டர் உல்ஷூக்கும் இல்லையென்றேற்படுகிறது. ஆனால் வெங்கையா 1908-ம் ஆண்டு 302நீ கல்வெட்டையும் 1896-ம் ஆண்டு 116நீ கல்வெட்டையும் மேற்கோளாகக் காட்டுகிறார். இந்த 302நீ கல்வெட்டு, தஞ்சாவூர்ஜில்லா கும்பகோணம்தாலூக்காவிலுள்ள திருக்கழித்திட்டையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு உடைந்துபோன சாசனம். அதனில் பொன என்ற இரண்டு எழுத்துக்களே காணப்பட மற்றவை கல்வெட்டிலாகாகாரால் பொன்மாளிகைத்துஞ்சின தேவர் என்று பூர்த்திசெய்யப்பட்டிருக்கிறது: இந்த பொன என்ற இரண்டு எழுத்துக்கள் வேறு சொல்லாக மாறினாலும் மாறலாம். அவ்வாறு இல்லையென்று நிரூபிக்க இப்போது போதியசாதனங்க ளில்லை. இனி மற்றொரு ஆதாரமான 96-ம் ஆண்டு 116நீ கல்வெட்டைக் கீழே குறிக்கிறேன்.

(1) "திருமகள்போல பெருநிலச் செல்வியும்..............(3) விளங்கும் யாண்டே செழியரைத் தேசு கொள் ஸ்ரீகோவிராஜராஜகேசரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு உ௰எ-வது வடகரை ராஜேந்திர ஸிம்ஹ வளநாட்டு (4) நாங்கூர்நாட்டு நாங்கூர் திருவெண்காட தேவர்க்கு உடை[யார்பொ]ன்மாளிகையிற் றுஞ்சின தேவர்க்குயாண்டு [ங]ஆவது ஈழத்துப்பட்ட கோடும்பாளூர் வேளான் சிறிய வேளான்மகன் சுந்தரசோழன் உடையார் திருவுண்ணாழிகையில் (5) உள்ளார் சந்திராதித்தவலும் ஒரு திருநொந்தாவிளக்கெரிய நாள்படி திருவெண்காடன் நாழியால் நெய் ங க்கு இவன் குடிஞைக் கல்லால் தந்தபொன் உ௰உ இப்பொன் (6) இருபத்திருகழஞ்சும் வ்ருஷஹவாஹனதேவர் நம்பிராட்டியார்க்கு சாத்த தொடர் ங. இத்தொடர் மூன்றுக்கு தாளிம்பம் ஒன்றாக கூட்டத்து இவனே உடையார் திருமஞ்சனம் ஆடியருளும்போது ஸ்ரீமுடியில்வைத்து வைத்து திருமஞ்சன மாடியருளவைத்த பொற்பூ க-ஞற் குடிஞைக் கல்லால்பொன் எ௨ எழுகழஞ்சு."

இந்தக் கல்வெட்டிலும் பொன்மாளிகைத்துஞ்சினதேவர்பெயர் சொல்லப்பட்டிருக்கிறதேத்விர அவர் சுந்தரசோழபராந்தகதேவரென்றுவது வேறு ஒருவரென்றுவது குறிக்கப்படவில்லை. 19-ம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையிலே பொன்மாளிகையிலே துஞ்சினருக்கு ஒரு பெண் உண்டென்பதும் அவள்பெயர் பராந்தகன் குந்தவைப்பிராட்டியாரென்பதும் தான் தெரிகிறதேயொழியப் பொன்மாளிகையில் துஞ்சினன் இன்னனென்று புலப்படவில்லை. ஆனல், தஞ்சாவூர்ப் பிரகதீசுரத்து 6-நிர் கல்வெட்டில் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் என்ற பெயர் வருகிறது. அப்பகுதியைக் கீழே குறித்துள்ளேன்.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச்செல்வியும்.......................

......கோராஜகேசரிவர்மரான ராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடையார் ராஜராஜீஸ்வரம் உடையார்கோயிலில் உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருத்தமக்கையார் வல்லவரையர் வந்தியதேவர் மகாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் எழுந்தருளிவித்த திருமேனிகள்.......................

.. உமாபரமேசுவரியார்க்கும் பொன்மாளிகைத்துஞ்சின தேவராக எழுந்தருளிவித்த திருமேனிக்கும், ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் தம்மையாக எழுந்தருளிவித்த திருமேனிக்கும்[4].................

....

௰௩-பொன்மாளிகைத் துஞ்சினதேவராக எழுந்தருளிவித்த திருமேனிக்கு திருவமுதுக்குப் பொது பழ அரிசி இருநாழியாக[5]........"

இந்தக் கல்வெட்டிலே காணப்படும் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் என்பதும், மேற்குறித்த தாராபுரம் கல்வெட்டிற் காணப்படும் ஸ்ரீ பிராந்தகன் குந்தவைப்பிராட்டியார் என்பதும் ஒருவரையே குறிக்குமென்று கொண்டுவிட்டார்களென்று காண்கிறது. தஞ்சாவூர்க்கல்வெட்டில் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் ராஜராஜனது தமக்கையாரென்றும், வல்லவரையர் வந்தியதேவர் மாதேவியார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக அச்சாசனத்தில் தம்மைப்பற்றிவருமிடங்களிலெல்லாம் கூறப்பட்டிருப்பதோடு மற்றும் பல கல்வெட்டுக்களிலும் அதேமாதிரி காணப்படுகிறது.[6] தாராபுரம் கல்வெட்டிலோ ஸ்ரீபிராந்தகன் குந்தவைப்பிராட்டியார் என்பாள் பொன்மாளிகைத்துஞ்சினதேவர்

---

[4] S. I. I. II. p. 69. [5] Ibid. p. 70. [6] Nos. 2, 7, 8

மகள் என்று கூறிக்கொள்கிறாள். இவ்விரண்டு பெயர்களுள்ளும் ஒற்றுமையு மில்லை. இக்கல்வெட்டுக்களோ முதல் இராஜராஜனது இருபத்தொன்றுமுதல் இருபத்தொன்பது ஆண்டுகட்குட்பட்டவை. இதுவரை ஆராய்ந்ததின்பலனாகக் கிடைத்தவை வருமாறு:—

1. பொன்மாளிகையில் துஞ்சினதேவன் அரசாண்ட ஒரு சோழன் என்பது.
2. இவன் மனைவி பெயர் தேவி அம்மனார் என்பது; இவள் ஒரு சேரன்மகளார் என்பது.
3. இவனது பெண்பெயர் ஸ்ரீ பிராந்தகன் குந்தவைப்பிராட்டியார் என்பது.
4. இராஜராஜனது திருத்தமக்கையாரும், வல்லவரையர்வந்தியதேவரது மாதேவியாருமான ஆழ்வார் குந்தவைப்பிராட்டியார் இவனுக்கு நெருங்கிய உறவுடையாள்; ஆகவே இராஜராஜனும் உறவினன்.
5. இவன் பொன்மாளிகையில் இறந்தான் என்பது.
6. பொன்மாளிகையில் துஞ்சினதேவனது மூன்றாமாண்டிற்கு முன்னரே சொடும்பாளூர்வேளான் சிறியவேளான் ஈழத்திலே இறந்துபட்டான்.

என்பனவாம், மேற்காட்டியவைகளெல்லாம் உண்மையாக நிலை பெறுமாயின் இவன் இன்னானென்று விசாரித்தறியலாம்.

பொன்மாளிகையில் துஞ்சினதேவன் அரசாண்ட ஒரு சோழன் என்பது பொதுவாகக் கல்வெட்டுக்களால் அறியப்படுவதோடு 96-ம் ஆண்டு 116-ம் நிர். கல்வெட்டாலும் உறுதிபெறுகிறது. வெங்கையா முதலியோர் கூறுகிறபடி இவன் சுந்தரசோழபராந்தகதேவனாயிருந்தால் இவனது மாதேவியார் சேரன்மகளாரான தேவி அம்மனாராயிருக்க முடியாது. 'சுந்தரசோழபராந்தகதேவனின்மனைவியார்பெயர் வானவன் மாதேவி. தன் கணவனிறந்ததும் வானவன்மாதேவி ஸஹகமனஞ்செய்தாள்' என்பர் கோபிநாதராயரவர்கள்.[7] "தேவமாதர் எனது கணவனை வசிக்குமுன் நான் எனது நாயகனான சுந்தரனைத் தொடர்வேன்" என்று

[7] சோழவமிசசரித்திரச்சுருக்கம்.

சொல்லி 'நற்செய்கையில். அருந்ததியையொத்த இராக்கினி வானவன் மஹாதேவி பகலை இரவுதொடர்வதுபோலத் தொடர்ந்துசென்றாள்' என்று திருவாலங்காட்டுச் செப்பேடு (65 ஆவது சுலோகம்) கூறுவது[8] இதனை வலியுறுத்துகிறது. இதனாலே சேரன்மகளாரை மனைவியாக வுடைய பொன்மாளிகையில் துஞ்சினான் வேறு; பராந்தகன் வேறு என்றேற்படுகிறது.

பொன்மாளிகையில் துஞ்சினான்மகள் ஸ்ரீ பராந்தகன் குந்தவைப் பிராட்டியார். சுந்தரசோழன்மகள் பெயரோ ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் என்பது. இவள் தன்னைக்கூறும்போதெல்லாம் இராஜராஜ தேவரது திருத்தமக்கையாரென்றும் வல்லவரையர் வந்தியதேவர்தேவி யென்றும் கூறிக்கொள்ளுகிறாள். இவ்வாறு கூறுவது இராஜராஜனது இருபத்தொன்பதாமாண்டிலே. தாதாபுரத்துக்கல்வெட்டுக்கள் இவனது இருபத்தொன்று, இருபத்தைந்தாமாண்டிலே வெட்டப்பட்டன. அவற்றிலும் அவள் தனது கணவன்பெயரைக் கூறியிருக்கலாம். மணமாக வில்லையென்றாலோ, ஆதித்தகரிகாலன் 170-ல் இறந்தகாலத்திலேயே இராஜராஜன் அரசாளும் திறமையுடையவனாக இருந்தானென்று கேட்பதால்,[9] இவனுக்கு அப்பொழுது இருபதுவயதாவது இருக்கவேண்டும். இவன் 985-ல் சிம்மாசனமேறினான். இவனது இருபத்தோராவது இராச்சிய ஆண்டுக்கே இவன் தமக்கை ஆழ்வார்பராந்தகன் குந்தவைப் பிராட்டியாருக்கு (20 + 15 + 21) ஐம்பத்தாறுக்குமேற்பட்டு இரண்டு மூன்று வருடங்களாவது ஆகியிருக்கவேண்டும். அதுவரை மணமாக வில்லையென்பது அசம்பாவிதமாகும். ஆகவே ஆழ்வார் பராந்தகன் குந்தவையார்தகப்பன் வேறு; ஸ்ரீ பராந்தகன் குந்தவைப்பிராட்டியார் வேறு என்றேற்படுகிறது.

இனி ஸ்ரீ பராந்தகன் குந்தவைப்பிராட்டியார் மகளாகவே, ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் பொன்மாளிகையில் துஞ்சினானுக்கு எவ்வித மான உறவுடையாள் என்று கவனிப்போம். இவள் இவனது படிமத்தை இராஜராஜனாற் கட்டப்பட்ட இராசராசேச்சரத்தில் எடுப்பித்து அதற்குவேண்டும் நிவந்தங்களும் விட்டுள்ளாள். ஆழ்வார் குந்தவைப்

[8] S. I. I. III p. 420.

[9] திருவாலங்காட்டுச்செப்பேடு S. I. I. III 420.

பிராட்டியார் இவன் மகளாயிருந்தால் அச்செய்தியை அவ்வாறே கூறியிருப்பாள். ராஜராஜனது திருத்தமக்கையார் என்று சொல்லவந்தவள் பொன்மாளிகைத்துஞ்சினன் சுந்தரசோழபராந்தகன்மகளார் என்று சொல்வது முடியாதகாரியமல்ல; அன்றியும், ஒரே ஆண்டிற்பிறந்த தஞ்சை, தாதாபுரம் கல்வெட்டுக்களிற் பெயர்வேறுபாடு தோன்றக் காரணமில்லை. இந்தத் திருத்தமக்கையார் என்ற பெயரை உபயோகித்திருப்பதாலேயே மாளிகைத் துஞ்சினன் தகப்பனல்ல. பராந்தகன் குந்தவையார் என்றிருப்பதால் பராந்தகன் மகளாவாள் என்றுலோ இந்தப் பிராந்தகன் பாாந்தகன் என்றபெயர் பொதுப்பெயர் என்று தெரிகிறது. கண்டராதித்ததேவர் மாதேவியார் மழவரையன்மகளார் தன்னைப் பிராந்தகன் மாதேவ அடிகளென்று கூறிக்கொள்ளுகிருள்.[10] பொன்மாளிகைத்துஞ்சினுங் மனைவியோபராந்தகதேவியம்மன் என்கிருள்.

இன்னும் இதுபோன்று பல வுண்டு. இதுவன்றி முக்கியமாகக் கவனிக்கவேண்டுவது தஞ்சை இராஜராஜேச்சுரமான பிரகதீசுவரம் இராஜராஜனது பிற்கால அரசாட்சியிற் கட்டப்பட்டது. இவள் தன் தகப்பன்படிமத்தை வைப்பதாயிருந்தால் வெகுநாள்முன்னரே இன்னும் பெரியதும் பழையதுமானகோயில்களில் வைத்திருக்கலாம். ஆதலினுலே இவன்—பொன்மாளிகையில் துஞ்சினவன்—சுந்தரசோழபராந்தகனுயிருக்கவியலாது என்பது திண்ணம்.

இனி அவன் யாராயிருக்கலாமென விசாரிப்போமாயின் இவனுக்கு ஆழ்வார் பிராந்தகன் குந்தவையார், நெருங்கிய உறவினளாக இருந்தாலன்றி இவன் படிமத்தை யொரு கோயிலில் வைத்திருக்கமாட்டாள். இவளுக்கு இரண்டு சகோதரர் உண்டு. அவருள் ஒருவன் இராஜராஜன். அவன் இக்காலத்தில் அரசுசெலுத்துபவன். மற்றொருவன் ஆதித்திய கரிகாலன். இவன் கி. பி. 965, 970-ல் அரசாட்சிசெய்து சிவபதமடைந்தவன். இவன் சிதம்பரம்தாலூக்கா காட்டுமன்னர்கோயிற் பக்கத்தில் உயிர்துறந்தானென்று உடையார்குடிக்கோயிற் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. இவன்தான் நம்பியாண்டார்நம்பியைக்கொண்டு தேவாரத்திருமுறைகளைத் தேடியெடுத்து வகுத்தானென்று நம்பியாண்டார்நம்பி கால ஆராய்ச்சியிற் காட்டியுள்ளேன். ஆகவே இவன் சிதம்

10 S. I. I. iii p. 298.

பாதத்தில் மிகப்பற்றுடையவனாக இருந்திருக்கவேண்டும். ஆண்டே இவன் உடல் தீக்கிரையாக்கப்பட்டிருக்கவேண்டும். அதுகொண்டுதான் நம்பியாண்டார் நம்பிகளும், 'செம்பொனணிந்துசிற்றம்பலத்தைச்சிவலோகமெய்தி-நம்பன்கழற்கீழிருந்தோன்குலமுதலென்பர்' என்று கோச்செங்கட்சோழனைச் சிறப்பிக்கும் ஒருபாவில் தமது அரசனைப் புகழ்ந்துள்ளார்.

இதுகாறும் கூறியவற்றால் ஆதித்தியகரிகாலனைப் பொன்மாளிகைத்துஞ்சினதேவர் என்றும், அவனது மனைவி ஒரு சேரமான்மகள் பராந்தகன்தேவி அம்மனார் என்றும், இவர்கள் பெண்பெயர் ஸ்ரீபராந்தகன் குந்தவைப்பிராட்டியார் என்றும், இவ்வாதித்திய கரிகாலனது படிமம் தஞ்சை இராஜராஜேச்சுரத்தில் எடுப்பிக்கப்பட்டதென்றும் அறிந்தோம்.

சோமசுந்தரதேசிகன்.

அருணந்திசிவாசாரியசுவாமிகள்.

'பார்விரித்த நூலெல்லாம் பார்த்தற்குச் சித்தியிலே-யோர்விருத்தப் பாதிபோதும்' என ஆன்றோரால் கொண்டாடப்பெறும் சிவஞானசித்தியார் என்னும் சைவசித்தாந்தவழிநூலை யியற்றிய பெரியசர் அருணந்திசிவாசாரியராவர். இது இவரது தீட்சாநாமம் என்பர். இப்பெரியார் சைவர்கட்குப் பெரிதும் வேண்டற்பாலதான ஆகமங்களையெல்லாம் ஐயம் திரிபு அற ஓதியுணர்ந்திருந்தமையின் சகலாகமபண்டிதர் என்னும் சிறப்புப்பெயர் பெற்றிருந்தனர். சைவசந்தானசாரியருள்ளே இவரை இரண்டாமவராகக் கூறுவர்.

இப்பெரியாரது சரித்திரம் முழுவதும் கிடைத்திலது. இவர் திருத்துறையூரிற் பிறந்தாரென்று சிலரும், 'அவ்வூரிலே வதிந்தவர்; ஆனால், பிறந்த ஊர் இஃதென நிச்சயிக்கமுடியவில்லை;' என்று சிலரும் எழுதியிருக்கின்றனர்.

இவர்கட்குப்பின் வந்த தத்துவப்பிரகாசர் இப்பெரியார் சீர்காழிப் பதியினர் என்று தமது தத்துவப்பிரகாசத்தில் மலைவறக்கூறியிருக்கின்றனர். அவர்கூற்றுப் பின்வருமாறு:—

நந்திசனற்குமரன்சத்தியஞானியடிசேர்
நாதனும்பரஞ்சோதிமெய்கண்டதேவன்
முந்துசண்பையர்தலைவன்கொற்றவன்குடியே
முதுபதியாமுமாபதியிம்முறைமையிலேயாண்ட
செந்திருவின் பயன் சிற்றம்பலநாடினுன்மெய்ச்
சிவஞானவடிவான திருமேனியடைவாய்த்
தந்தவிவர்சந்தானகுரவரிவர்மலர்த்தா
டப்பாமலேமனத்திலொப்பாகவைப்பாம்.

நற்பொருளாம்பரன்பாலினந்தியருணூலு
நல்வழியாமெய்கண்டான்சண்பையர்நாதி
னற்புதமாருமாபதியாமிவருரைத்தநூலு
மாகமத்தினுட்பொருளுமளப்பில்பாசமயப்
புற்புதமாநிலையில்பொருளனைத்தும்பார்த்துப்
பொருண்மைப்பாலறியாதமருண்மைப்பாலுடையேன்
சொற்பொருளாற்றத்துவப்பிரகாசமெனச்சொன்னேன்
சொல்லிரவியொளியைமின்மினிதொடருநெறியே.

மேற்காட்டிய செய்யுட்களுக்கு உரைகண்ட பெரியார், சண்பையர் தலைவன் என்பதற்கு சண்பையர்தலைவநாயனர் என்று உரைகண்டாரேனும், 'அவ்வடிகள் அருளிச்செய்த சிவஞானசித்தியும்' என்று உரை கூறுவதால், சகலாகமபண்டிதர் சீர்காழிப்பதியினர் என்பது தெளிவாம்.

இத் தத்துவப்பிரகாசர் சிற்றம்பலநாடிகளுடைய சீடரின் சீடரென்று தம்மைக் கூறுகின்றார். நாடிகள் உமாபதிசிவத்தின் சீடரான அருணமச்சிவாயருக்குப் பின்வந்தவரென்பது,

*சிவனந்திசனற்குமான்சிற்சத்தியஞான
தரிசிபரஞ்சோதிமெய்கண்டான்
நவமறையான்ஞானகுருவுமாபதிமச்சுறைவா
னற்சிற்றம்பலநாடிபழூறைதகட்டும்பந்தன்

---

*இப்பாட்டு, பிழைவிரவியுளதாயினும் தேசிகரவர்கள் எழுதியனுப்பியபடி பதிக்கப்பட்டுள்ளது.— ஊதவிப்பத்திராதிபர்.

சிவபுரந்தத்துவப்பிரகாசன்றிருவாரூசிலச்
செட்டித்தெருஞானப்பிரகாசன்பின்பவ்வூர்ப்
பவமொழிக்குஞ்சிதம்பாநாதன்ஞானப்பிரகாசன்
பயில்தருமைதிருஞானசம்பந்தன்

என்ற செய்யுளால் பெறுகின்றோம்.

இச்செய்திபைக்கூறிய தத்துவப்பிரகாசர் கி. பி. பதினைன்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். உமாபதிசிவம் சங்கற்பநிராகாணத்தைச் சகம் 1235-க்குக் கி. பி. 1313-ல் இயற்றியிருப்பதாலும், அன்னாருக்குத் தத்துவப்பிரகாசர் நான்காவது தலைமுறையினராகையாலும், இவர் கி. பி. 1400-க்குள் வாழ்ந்தவரென்றுகொள்வது தவறாகாது. அருணந்திசிவாசாரியரும் உமாபதிசிவத்துக்கு ஒருதலைமுறை முன்னே இருந்தவராகையால் ஒருநூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்கூறும் செய்தியொன்று பிழைபடக் காரணமில்லை. ஆகவே, அருணந்திசிவாசாரியர் சீர்காழியிற்பிறந்தாரென்ற புதியதோருசெய்தியை அறிகின்றோம்.

மேற்கூறியவைகளை எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு வமிசாவளியொன்று குறிக்கின்றேன்.

மெய்கண்டார்
|
சகலாகமபண்டிதரான அருணந்திசிவாசாரியர்
|
மறைஞானசம்பந்தர்
|
உமாபதிசிவம்
|
அருணமச்சிவாயர்
|
சிற்றம்பலநாடிகள்
|
காழி-பழுதைகட்டிச்சம்பந்தன்
|
சிவபுரம்-தத்துவப்பிரகாசர்

சோமசுந்தரதேசிகன்.

திருவிசையமங்கை.

சிதம்பரம் ஸ்ரீமீநாக்ஷி போதனுமுறைப்பாடசாலை மாணவர்

திரு. வை. சுந்தரேசவாண்டையார் எழுதுவது.

சோழநாட்டுத் தேவாரம்பெற்ற தலங்களில் திருவிசையமங்கையும் ஒன்றாகும். இத்தலம் திருப்புறம்பயத்திற்கு மேற்கிலும், திருவைகாவூருக்குக் கிழக்கிலும், மண்ணியாற்றின் வடகரையிலுமுள்ள விசையமங்கை என்னும் ஊரிலுள்ள சிவாலயமா? அல்லது கொள்ளிடத்தின் வடகரையிற் கோவந்தபுத்தூரிலுள்ள சிவாலயமா? என்பது பலரின் ஐயப்பாடாக உள்ளது. இதனைத் தெளிவுபெற விளக்குவேன்.

கோவந்தபுத்தூர் என்பது புத்தூர் என்னும் ஒருபெயர், காரணம் பற்றிய திருவரிசிற்கரைப்புத்தூர், திருக்கோளிலிபுத்தூர் என்பன போன்று, காரணப்பெயராக வழங்குவதாயிற்று. சிவபெருமானை இலிங்கவடிவத்தில் அன்புபூண்டு ஒரு பசு இத்தலத்தே நாள்தோறும் தனது மடியிலுள்ள பாலைச்சொரிந்து பூசித்துப் பேறெய்தியதால் அச்சிறப்புத்தோன்ற இத் திருப்பதிக்குக் கோவந்தபுத்தூர் என்னும் பெயர்வந்தது. இஃது இன்றும் அவ்வாலயத்தில் உருவக்காட்சியில் வைத்துப் போற்றப்படுகின்றது. இதனை,—

"கீதமு னிசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன்னியல் புடைப் புனிதர் பொன்னகர்,
கோதினம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசைய மங்கையே".

என்னும் திருஞானசம்பந்தசுவாமிகள் திருப்பாடலால் அறியலாம்.

"கொள்ளி டக்கரைக் கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விசைய மங்கை
யுள்ளி டத்துறை கின்றவு ருத்திரன்,
கிள்ளி டத்தலை யற்ற தயனுக்கே"

என்னும் திருநாவுக்கரசரது திருப்பாடல், கொள்ளிடக்கரையிலுள்ள கோவந்தபுத்தூரில் திருவிசையமங்கை உள்ளது என்பதும், அங்கே சிவபெருமான் கோவினுக்கு அருள்சுரந்ததும் தெற்றென விளக்கி, ஐயப்பாட்டினை நீக்குகின்றது.

சைவசமய குரவர்கள் ஓதிய திருமுறைகளிற் சிற்சிலபதிகங்களில், திருப்பதியின் பெபர் ஒன்ருகவும் திருக்கோயிலின்பெயர் மற்றொன்ருகவும் உள்ளன. இஃது, திருக்கடந்தையுள் தூங்கானைமாடக்கோயிலும், திருச்செங்காட்டங்குடியிற் கணபதீச்சரமும், கருவூரில் திரு ஆனிலையும் உள்ளன என்னும் இவை போன்றவற்ருல் அறியக்கிடக்கின்றது. இம்முறையின்படியே கோவந்தபுத்தூரில் திருவிசையமங்கை உள்ளது என்பதையும் உய்த்துணர்க.

சேக்கிழார் அருளிச்செய்த திருஞானசம்பந்தசுவாமிகள் புராணத்திற் சுவாமிகள் யாத்திரையாக வந்தவரலாறு கூறுமிடத்து அவர் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருப்பழுவூரிலிருந்து திருவிசையமங்கை வந்து, கோ வழிபட்ட குறிப்புள்ள திருப்பதிகம் ஓதி, பின்னர்த் திருவைகாவையும், திருப்புறம்பயத்தையும் அடைந்ததாக 238 முதல் 241 வரையுள்ள பாட்டுக்களிற் கூறப்பட்டுளது. இதுதான் நேரான வழியாக உள்ளது. மண்ணியாற்றங்கரைக் கோயிலாயின் மேற்கிலுள்ள திருவைகாவுக்கு முதலில் வந்துதான் விசையமங்கைக்கு வாநேரும். இதனாற் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ளதே, விசையமங்கை என்பது விள்ங்குகிறது.

நம்பிரானுக்கு, இஞ்ஞான்று ஊர்தோறும் வடமொழிப் பெயர்களைப் புனைந்து வழங்குவதுபோலன்றி, முற்காலத்து நம் சைவசமயாசாரியர்கள் எந்த ஊரில் வழிபாடாற்றினார்களோ, அவ்வூர்ப்பெயரொடிணைத்து நம்பிரானது திருப்பெயரைக் குறித்துள்ளார்கள். 'மழபாடியுளண்ணலே!', 'புறம்பயம் அமர்ந்தோய்!', 'ஒற்றியூருடையகோவே!' என்பனவாக வழங்கினான்றி, ஓரிடத்தும், அச்சிட்ட தேவாரப்பதிகங்களின் ஈற்றில் வரையப்பட்டுள்ள பெயர்கள் அப்பதிகங்களிற் காணப்படவே இல்லை என்பது திருமுறைபயிலுவார்க்கு நன்குவிளங்குவதாகும். இந்தமுறையைப் பின்பற்றியே, நம் பரமாசாரியர்காலத்திற்குப் பிற்பட்டு அரசர்களால் ஒவ்வோர் ஆலயங்களிலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் நம்பிரான்பெயரைக்குறிக்குமிடத்துத் 'திருவலஞ்சுழியுடையமகாதேவர்க்கு', 'பட்டீச்சுரமுடைய மகாதேவர்க்கு', என்று அவ்வவ் வூரொடுசேர்த்து நம்பிரானை மகாதேவரென்ற திருப்பெயரானே குறித்துள்ளார்கள். இம்முறையே திருவிசையமங்கை என்னும் கோயிற்பெயரால் நம்பிரானது திருப்பெயர் குறிக்கப்பட்டிருத்தலைக் கோவந்தபுத்தூர் ஆலயக்கல்வெட்டுக்களில் இன்றும் யாவரும் காணலாம். கோவந்தபுத்தூர் ஆலயக்கல்வெட்டுக்களில் 'விசையமங்கையுடைய மகாதேவ' ரென்றே குறிக்கப்பட்டிருக்கின்றது. இதனை யாரும் மறுப்பதற்கில்லை. மேற்காட்டிப்போந்தவாறு தேவாரங்களாலும், திருத்தொண்டர்புராணத்தாலும், கல்வெட்டுக்களாலும் ஆராயுமிடத்துத் திருவிசையமங்கை என்னும் பதிகம் பெற்ற தலம், கோவந்தபுத்தூரிலுள்ள சிவாலயமே என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குவதாகும்.

உ

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

வினையியல்.

198-வது வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
சூத்திரம். நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.

இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் 'வினையென்றது முதனிலையை. இஃது ஆகுபெயராய்த் தன்னாற் பிறக்கின்ற சொல்லை யுணர்த்திற்று' என்று கூறியுள்ளார். இங்கு முதனிலை என்பதற்குப் பகுதி என்று பொருள்கொண்டு அவ்வாறு கூறினதாகத் தோன்றுகிறது. உண், தின் முதலிய முதனிலைகள் வினையாயின், உண்டான் தின்றான் என்னுமிடத்து உண், தின் என்பனவற்றிற்பொருள் மாறுபட்டுநில்லாததால் ஆகுபெயராய் உண்டான், தின்றான் என்பனவும் வினையாகக் கூறப்படுகின்றன என்று கொள்வது நேர்மையன்று. 'வினையே செய்வது செயப்படு பொருளே.......... ஆயெட் டென்ப தொழின்முத னிலையே' தொல். சொல். 112) என்னுஞ் சூத்திரக்குறிப்பில் வினை என்பதற்குப் பொருள் தொழில்நிகழ்வதற்குமுன் செய்பவனின் (கருத்தாவின்) உடலில் உண்டாம் முயற்சி என்று பொருள் கூறப்பட்டது. இங்கு ஆகுபெயரால் அம்முயற்சியை யுணர்த்துஞ் சொல் என்பதே வினைக்குப் பொருளாகும். அவ்வாறு கொள்ளின் உண் தின் என்பன எவ்வாறு வினையோ, அவ்வாறே உண்டான் தின்றான் என்பனவும் வினையாகும். மேலும் அச்சூத்திரத்தில் முதனிலை யென்பதற்குக் காரணம் என்று பொருள்கொண்டு, இச்சூத்திரவுரையில் பகுதியென்ற பொருளில் முதனிலை யென்னுஞ் சொல்லைக்கூறுவது பொருத்தமன்று.

இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்ற
200-வது அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு
சூத்திரம். மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.

இச்சூத்திரத்திற் காலம், இறப்பு நிகழ்வு எதிர்வு என மூன்று வகைப்படும் என்றும், வினை, தெரிநிலை குறிப்பு என இருவகைப்படும் என்றும் கூறப்படுவதால் வாக்கியபேதம் என்ற குற்றம் இங்குப் புலப்படு கின்றது என்று தோன்றலாம். ஆயினும், இச்சூத்திரத்தால், காலம் இறப்பு நிகழ்வு எதிர்வு என்று மூவகைப்படும் என்பது விதிக்கப்பட வில்லை.

"இறப்பே நிகழ்வே யெதிர தென்னுந்
திறத்தியன் மருங்கிற் றெரிந்தன ருள்ளப்
பொருணிகழ் வுரைப்பது கால மாகும்" (தொல். செய். 202.)

என்னுமிடத்து இறப்பு, நிகழ்வு, எதிர்வு என இம்மூன்றுவகைப் பட்டது காலம் என்று விதிப்பர். அம்மூவகையையும் இங்குப் புரோ வதித்தார் என்றே கூறலாம். அவ்வாறாயின் இச்சூத்திரம், தெரிநிலை குறிப்பு என வினை இரண்டுவகைப் படுமேன்றே விதிக்கின்றது. ஆகை யால் வாக்கியபேதம் என்ற குற்றம் வாராது.

இவ்வாறாயின், 'காலந் தாமே மூன்றென மொழிப' (தொல். சொல். 199) என்னுஞ் சூத்திரம் எதனை விதிக்கின்றதெனின், ஒன்றையும் விதிக்கவில்லை. செய்யுளியற்சூத்திரத்தின் பொருளை இச்சந்தருப் பத்துக்குத்தக்கவாறு புரோவதிக்கின்றது என்றே கூறலாம்.

201-வது சூத்திரம்.

குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வருஉம் வினைச்சொ லெல்லா
முயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்கு மோரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே.

இச்சூத்திரவுரையிற் 'காலமொடு வருஉம்' என்னும் அடைமொழிக் குப் பயன் சேனாவரையர் 'மூன் றுபற்றி உணர்த்தப்படும் வினைச் சொற்களை, இஃது இறந்தகாலத்திற்குரித்து, இது நிகழ்காலத்திற் குரித்து, இஃதெதிர்காலத்திற்குரித்து என வழக்குநோக்கி, உணர்ந்து கொள்கவென்பது விளக்கிய, காலமொடு வருஉமென்றார்' என்றார். ஆசிரியர் தொல்காப்பியனார் காலவெழுத்தைக் கூறாததால், வழக்குநோக் கிக் காலம் அறியவேண்டுமென்பதுதானே புலப்படுகின்றது. ஆதலால் 'காலமொடு வருஉம்' என்பது அதற்கு ஞாபகம் என்று கொள்வது

அவசியமா? நச்சினார்க்கினியர் குறிப்பிற்குங் காலம் உண்டென்பது வலியுறுத்தற்கு, 'காலமொடு வருமெனப் பின்னுங் கூறினார்' என்றார்.

அவைதாம்,
202-வது சூத்திரம். அம்மா மெம்மே மென்னுங் கிளவி
யும்மொடு வருஉங் கடதற வென்னு
மந்நாற் கிளவியோ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப்பில் 'அஃநான்கீறும் ஏனையெழுத்தின்முன் ஙகாரமும் மகாரமுமொழித்து இன்பெற்று வரும்' என்ற பாடம் உளது. சைவசித்தாந்தக்கழகப் பதிப்பில் ஙகாரமும் என்பதற்குப் பிரதியாக ரகாரமும் என்ற பாடம் உளது. ஙகாரமும் என்ற பாடமே உசிதமானது என்பது நச்சினார்க்கினியர் இச்சூத்திரவுரையிற்கொடுத்துள்ள உதாரணங்களிலிருந்து நன்கு விளங்குகின்றது.

இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்திற் கண்ட 'அம்,ஆம் என்பன முன்னின்றாரை யுளப்படுக்கும், தமராயவழிப் படர்க்கை யாரையும் உளப்படுக்கும்; எம், ஏம் என்பன படர்க்கையாரை உளப் படுக்கும்; உம்மோடு வருஉங் கடதற அவ்விருவரையும் ஒருங்கு உளப் படுத்தலும் தனித்து உளப்படுத்தலும் உரிய' என்ற சொற்றொடர், சேனாவரையத்திலுள்ளவாறே இருப்பதால், சேனாவரையத்திலிருந்து இளம்பூரணவேட்டில் இது சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் இச்சூத்திரவுரையினிறுதியில் உரையாசிரியரே "இவை தன்னொடு முன்னின்றானையும் உளப்படுக்கும், படர்க்கையானையும் உளப்படுக்கும், அவ்விருவரையும் உளப்படுக்குமென்பது, 'அவற்றுள், பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி' (தொல். சொல். வினை. 12) என்னுஞ் சூத்திரத்துட் சொல்லுதும்" என்று கூறியுள்ளார்.

கடதறவென்னு
203-வது சூத்திரம். மந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்னே னல்லென வருஉ மேழுந்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே,

இச்சூத்திரவுரையிற் சேனாவரையத்திற் 'குற்றுகரம், காலவெழுத்துப் பெறுங்கால், உம்மீற்றோடொக்கும்' என்ற சொற்றொடரில் காலவெழுத்து என்பதற்குக் காலத்தைக்காட்டும் எழுத்து என்று பொருள்கொள்ளின், குற்றுகரத்திற்குப் பற்றுக்கோடாய் வரும் ட், த், ற், இவற்றிற்குமாத்திரம் அது பொருந்துமேயொழிய 'க்' குக்குப் பொருந்தாது. ஆகையால் காலவெழுத்து என்பதற்கு காலம் பற்றிவரும்போது வருஞ் சாரியை யெழுத்து என்று பொருள்கொள்ளவேண்டும்.

'குற்றுகரநான்கும் எதிர்காலம்பற்றிவரும்' என்று சேனாவரையர் கூறுகின்றார். 'குற்றுகரம் நான்கும் பெரும்பான்மையும் எதிர்காலத்துஞ் சிறுபான்மை ஏனைக்காலத்தும் வரும்' என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார். உரையாசிரியர் இவை இன்னகாலத்தில் வருமென்று கூறவில்லை.

சேனாவரையர் 'எதிர்காலம்பற்றி வழக்குப்பயிற்சியுமில்லாக் குற்றுகரத்தை அங்ஙனம் வரும் அல்லொடு பின்வையாது, மூன்றுகாலமும் பற்றிப் பயின்றுவரும் என், ஏன் என்பனவற்றின்முன் உம்மீற்றோடியையவைத்தது, செய்கென்பதுபோலச் செய்குமென்பதூஉங் காண்கும் வந்தேம் என வினைகொண்டுமுடியுமென்பதறிவித்தற்கெனக் கொள்க' என்றார். இம் மதத்தையே நச்சினார்க்கினியரும் கைப்பற்றினார். உரையாசிரியரோ 'அவற்றுட்—செய்கென் கிளவி வினையொடு முடியினு-மவ்வியறிரியா தென்மனார் புலவர்' (தொல். சொல். 204) என்னும் அடுத்த சூத்திரத்தில் 'செய்கென் கிளவி வினையொடுமுடியினும் அமைக எனவே செய்கும் என்னும் கிளவியும் வினையொடுமுடியினும் அமைக என்பது போந்ததாம்' என்று கூறியுள்ளார். உரையாசிரியர் கூறுவது நன்கு உள்ளது என்பது என் கருத்து.

204-வது சூத்திரம். செய்கென் கிளவி வினையொடு முடியினு மவ்விய றிரியா தென்மனார் புலவர்.

இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் 'இனி அவை முடியினும் அமையும் எனவே, பெயர்கொண்டுமுடிதலே வலியுடைத்து என்பதே போந்ததாம்' என்றார். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் செய்கென் கிளவி சிறுபான்மையல்லது பெயர்கொள்ளாது என்றனர்.

சேனாவரையர் "முன்னர் 'எத்திறத்தானும் பெயர்முடிபினவே' (தொல். சொல். 429) என்பதனாற் பெயரொடுமுடிதலெய்துவதனை விலக்கியவாறு" என்றார். ஆகையால் இச்சூத்திரத்திற்குப் பொருள் செய்து என்னும் அம் முற்றுவினை வினையோடும் முடியும் என்றாயிற்று. 'யான் காண்குவந்தேன்' என்ற வினைமுடிபுள்ள பிரயோகத்தில், காண்கு என்பது முற்றுவினையாயின் 'யான்' என்பதனோடு அந்நுவயிக்காது 'வந்தேன்' என்பதனோடு அந்நுவயிக்கும் என்று ஆசிரியர் கூறுவதின் உண்மைப்பொருளும், பயனும் நன்கு விளங்கவில்லை.

206-வது அர் ஆர் ப என வரூஉ மூன்றும்
சூத்திரம் பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இச் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் 'ஒழிப, தவிர்ப என மறையும் வரும்' என்று கூறியுள்ளார். ஒழிப, தவிர்ப என்ற இரண்டிலும், ஒழி, தவிர் என்ற வினைப்பகுதிகள் எதிர்மறைப்பொருளைக்காட்டினும், அவை எதிர்காலப்படர்க்கையுருவமேயொழிய மறையாகா.

அவற்றுள்,
209-வது பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி
சூத்திரம். யெண்ணியன் மருங்கிற் றிரிபவை யுளவே.

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:—பன்மைத் தன்மைச்சொற்கள் ஆராயுமிடத்து அவை திரிபுடைய என்றவாறு. யாதோ திரிபு எனின், அம் ஆம் என்னும் இரண்டும் தன்னொடு முன்னின்றானை உளப்படுக்கும். எம் ஏம் என்பன இரண்டும் தன்னொடு படர்க்கையானை உளப்படுக்கும். உம்மொடு வரூஉம் கடதறக்கள் முன்னின்றானையும் படர்க்கையானையும் உளப்படுக்கும் என்பது.

சேனாவரையர், நச்சினார்க்கினியர்:—கூறப்பட்ட இருபத்து மூன்றுசொற்களுள், பன்மையுணர்த்துந் தன்மைச்சொல் எண்ணியலும்வழி அஃறிணையையுளப்படுத்துந் திரிவனவுள என்றவாறு.

இச்சூத்திரத்தைத் 'தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென்—றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்' (தொல். சொல். 43) என்னுஞ் சூத்திரத்தோடுசேர்த்துநோக்குமிடத்து, சேனாவரையர், நச்சி

ஞர்க்கினியர் இவ்விருவருங் கொண்ட பொருள் பொருந்து மெனக் காண்கின்றது. இதைப்பற்றி அச்சூத்திரக்குறிப்பிற் காண்க. ஆயி னும், இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் உரையாசிரியரை மறுக்கவில்லை.

210-வது யாது ரென்னும் வினாவின் கிளவி
சூத்திரம். யத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப்பிற் 'பல்லோர் படர்க்கை யுணர்த்தும் மாரீற்றின்' என்ற பாடம் உளது. சைவசித்தாந்தக்கழகப்பதிப்பில் 'படர்க்கை யுணர்த்தும் ஆரீற்றின்' என்ற பாடம் உளது. முன்னருள்ள பாடம் அச்சுப்பிழை யென்பதில் ஐயமில்லை.

211-வது பாலறி மரபி னம்மூ வீற்று
சூத்திரம் மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே.

உரையாசிரியர் 'ஆவோவாகுஞ் செய்யுளுள்ளே' என்ற வாக்கியத் திற்குச் 'செய்யுளுள் எங்கும் ஆ ஓவாக என்றவாறு' என்று பொருள் கூறுகின்றார்.*

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் 'வந்தோம், சென்றோம் என்னும் வழக்கு வமீற்றின் சிதைவென மறுக்க' என்றனர். உரை யாசிரியர் அவ்வாறு கூறவில்லை.

ஆதலால் வந்தோன், வந்தோள், வந்தோர் என்னுஞ் செய்யுள் வழக்கின் அதிதேசத்தால் † வந்தோம், சென்றோம் முதலிய வழக்கு சேனாவரையர்காலத்தில் வந்துவிட்டதுபோலும்.

213-வது அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானுங்
சூத்திரம். கண்ணெனன் வேற்றுமை நிலத்தி னானு.

....

இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் உடையன், நிலத்தன் என்று உதாரணங் கூறியுள்ளார். சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் கச்சி

---

*இங்கு ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம் அஸதி பாதகே என்ற நியாயத்தை மனத்திற் கொண்டுள்ளார். இதன் பொருள்:—பாதகமில்லா விடின் எல்லாவாக்கியமும் தேற்றப்பொருளையே குறிக்கும் என்பது.

† அதிதேசம் என்பதை மொழிநூல்வல்லோர் (Philologists) அநா லஜி 'Anology' என்னுஞ் சொல்லால் வழங்குகின்றனர்.

னன், இல்லத்தன் என்ற உதாரணங் கூறியுள்ளனர். பின்னர்க் கொடுத்த உதாரணங்கள் சூத்திரப்போக்குக்குப் பொருந்தும். உடையன் என்பதைச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் மேற்சூத்திரத்திற் கண்ட 'அன்ன பிறவும்' என்பதனாற் கொண்டனர்.

214-வது சூத்திரம். அன்மையி[1] னின்மையி[2] னுண்மையின்[3] வன்மையி
னன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளு
மென்ன கிளவியுங் குறிப்பே காலம்.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் 'அன்மையும் உண்மையும் பண்பிற்கு மொத்தலிற் பண்பெனப் படா' என்றார். அதற்குப்பொருள்:— 'இராமன் கோவிந்தனல்லன், இராமன் உளன்' என்பனபோல, 'கருமை வெண்மையல்லது, கருமை உண்டு' என்னும் பிரயோகங்கள் வருகின்றன. இந்த உதாரணங்களால் அன்மை உண்மை இவ்விரண்டும் பொருளில்[4] இருப்பதுபோலக் குணத்திலும் இருக்கின்றன என்பது பெறப்படும்; பொருள் குணங்களோடு கூடியிருப்பதுபோலக் குணங்கள் குணங்களோடு கூடியிரா என்பது தருக்கமூலமாக நிருவப்பட்ட கொள்கையாதலால் அன்மை உண்மை யென்பன குணங்களாகா என்பது[5].

'அதனாற் பொருட்கட்கிடந்து, தனக்கோர் குணமின்றித் தொழிலின் வேறாய குணத்தின் அன்மை முதலாயின வேறெனப்படும்' என்று சேனாவரையர் கூறியிருக்கும் வாக்கியத்தின் பொருள்:—குணங்களோ பொருள்களில் இருப்பன; அக்குணங்கட்கு வேறே குணங்கள் கிடையா; அன்றியும், அவை தொழிலின் வேறானவை; இவ்வாறுள்ள குணங்களைக் காட்டிலும் அன்மை முதலாயின வேறெனப்படும் என்பது.

---

1 அன்மை=அந்யோந்யாபாவ: (அந்நியோந்நியாபாவம்)

2 இன்மை=அத்யந்தாபாவ: (அத்தியந்தாபாவம்)

3 உண்மை=ஸத்தா (ஸத்தை)

4 தருக்கநூலோர் பொருள் என்பதை த்ரவ்யம் (திரவியம்) என்பர்.

5 இதற்குக் காரணம் குணத்திற்குக் குணமின்மையின் என்றார். குணே குணாநங்கீகாராத் குணத்திற்குக் குணமின்மையின் என்பது என்பதின் மொழிபெயர்ப்பு.

அன்னபிறவும் என்றதனான் உரையாசிரியரும் சேனாவரையரும் நல்லன், தீயன் இவற்றைக் கொண்டனர்; இவ்வாறுகொண்டதற்குக் காரணம் நன்மை, தீமை முதலியன தருக்கநூல்களிற் கூறியிருக்கும் 24 குணங்களின்[1] வேறாகையாற்போலும்.

நச்சினார்க்கினியர் "அன்மையாவது 'எப்பொருளுமல்லனிறைவன்' என்றாற் பன்மை யுணர்த்தியும், அவைதாம் இவனல்லனென்றாற் குறிப்பை யுணர்த்தியும் நிற்கும்" என்றார். இங்குப் பண்பு என்பதற்குச் சேனாவரையர் கூறியவாறு குணம என்று பொருளன்று; இயற்கை என்று பொருள். அவ்வாறாயின் நல்லன், தீயன் முதலிய உதாரணங்கள் முற்சூத்திரத்திற்கே பொருந்தும். இங்குக் கூறினதற்குக் காரணந் தெரியவில்லை.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப்பில் 'உளதேனின், அது பண்பாயடங்கும்' என்ற பாடம் உளது. சைவ சிந்தாந்தக் கழகப்பதிப்பில் 'ஊறெனின்[2] அது பண்பாயடங்கும்' என்றபாடம் உளது. பின்னர்க் கூறிய பாடமே பொருத்தமானது: எவ்வாறெனின் வன்மை யென்பது ஆற்றலையும், ஊற்றின்வன்மையை யும் காட்டும். ஆற்றலென்பது குணத்துக்கும் உண்மையால், வன்மை யென்பது அப்பொருளையுணர்த்துமிடத்துப் பண்பெனப்படாது; ஊற்றினையுணர்த்துமிடத்துப் பண்பு எனப்படுமென்று பொருள் படுதலா லென்க.

உரையாசிரியர் இச்சூத்திரத்தையும் முற்சூத்திரத்தையும் ஒரே சூத்திரமாகப் படித்துள்ளார். தோன்றும், கொள்ளும் என்ற இருவினை இருப்பதால் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இரண்டுசூத்திரங்களாகக் கொண்டுள்ளனர்.

(தொடரும்)

---

1 24 குணங்களாவன:—ரூபம், இரசம், கந்தம், ஸ்பரிசம், சங்கியை, பரிமிதி, பிருதத்துவம், சம்யோகம், விபாகம், பரத்துவம். அபரத்துவம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், இயத்தினம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், ஸம்ஸ்காரம், தருமம், அதருமம், சப்தம்.

2 ஊறு என்பது ஸ்பர்ஶ: (ஸ்பரிசம்) என்பதின் மொழிபெயர்ப்பு.

மதிப்புரை.

சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா :—இது சந்தானகுரவர்களில் ஒருவராகிய உமாபதி சிவாசாரியர் அருளியது; திரு. M. சோமசுந்தரம்பிள்ளையவர்களால் அரும்பதவுரையுடன் அச்சிடப்பெற்றது; சைவர்கள் நாள்தோறும் பாராயணம்செய்தற்குரியது. விலை அணா 4; வேண்டுவோர், திரு. M. சோமசுந்தரம்பிள்ளை, T. A. முத்துப்பிள்ளையவர்கள்குமாரர், பல்லவராயப்பட்டு, மாயவரம் என்ற விலாசத்திற் பெறலாம்.

'சுவாமி நம்மாழ்வார் நூற்றெட்டுத்திருப்பதித்தாலாட்டு :—இது, 'உபய கவி அப்பா' என்பவர் அருளிச்செய்ததென்றும், திருக்குருகூர் அத்யயன உத்ஸவத்தில் இப்பொழுதும் சேவிக்கப்பட்டுவருவதென்றும் அறியப்படுகிறது. ஆழ்வார்திருநகரிக் கோயில் ஸ்தானீகம் பெரியன் தேசிகமையங்கார் என்ற பெரியன் வேங்கடநாராயணையங்கார் குமாரர் பெரியன் வே நா. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களால் இது அச்சிற் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. விலை அணா 1: வேண்டுவோர் ஆழ்வார் திருநகரியில் ஷை ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

(i) முருகன்தோத்திரப்பதிகம் [விலை அணா 1.] (ii) ஆத்திசூடி உரை [விலை அணா 1.] (iii) நமது தமிழ்த்தாய் [விலை அணா 2.] (iv) தமிழ் [விலை அணா 2]:—இவை நான்கு புத்தகங்களும் 'விசால ஹிருதயம்' பத்திராசிரியர் திரு. ராமசுப்பிரமணிய நாவலரவர்களால் எழுதிவெளியிடப்பெற்றவை. செய்யுளியற்றுவதிலும், உரைவகுப்பதிலும், கட்டுரை எழுதுவதிலும் நாவலரவர்களுக்குள்ள ஆற்றலை இவை நன்கு விளக்குகின்றன. வேண்டுவோர் செந்தமிழ்நிலயம் புத்தகசாலை, பத்மநாபபுரம், தக்கலை (P. O.) என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

மதுரைமித்திரன் :—இது திங்கட் கிழமைதோறும் மதுரையினின்று வெளிவரும் ஒரு வாரப்பத்திரிகை. ஸ்ரீமத். ந. சுப்பிரமணிய ஐயரவர்கள் இதன் ஆசிரியராவர். தேசியவிஷயங்களும் பிறவும் இதில் விரவிவருமென்று தெரிகிறது. வருடச்சந்தா (உள் நாடு) ரூ. 4; (வெளி நாடு) ரூ. 5.

ஸ்ரீ:

ஒருகுறிப்பு.

சங்ககாலத்துக்குப்பின் இலக்கணமும் இலக்கியமும் ஆகிய பெருநூல்களிபற்றும் ஆற்றல்வாய்ந்து விளங்கிய புலவர்களுள், இற்றைக்குச் சற்றேறத்தாழ முந்நூற்றெழுபது வருடங்கட்குமுன் வாழ்ந்தவரும் ஆழ்வார்களுட் சிறந்தவரான சடகோபரிடத்து மிக்க ஈடுபாடுடையவரும் ஆன திருக்குருகைப்பெருமாள் கவிராயர் என்னும் புலவர்பெருமானும் ஒருவராவர். இவர் வரலாறு முதலியன மாறனலங்காரமுகவுரை, மாறனலங்கார வரலாறு முதலியவற்றுள் அறியத்தக்கன. மாறனகப்பொருள், மாறன்பாப்பாவினம், மாறனலங்காரம், திருப்பதிக்கோவை, திருக்குருகை மான்மியம், மாறன்கிளவிமணிமாலை, நம்பெருமாள் மும்மணிக்கோவை முதலிய பலநூல்கள் இவரால் இயற்றப்பட்டனவென்று தெரிகிறது. இவற்றுள் மாறனலங்காரம் செந்தமிழ்ப்பிரசுரமாகப் பல ஆண்டுகட்குமுன் வெளியிடப்பட்டுளது. ஏனையவை இதுகாறும் வெளிவரவில்லை. அவற்றுள், தொல்காப்பிய முதலியவற்றில் விரிந்துகிடந்த அகப்பொருளிலக்கணங்களை முறைப்படத்தொகுத்து இனிது பொருள் விளங்க இவரியற்றிய மாறனகப்பொருளிற் களவியல், வரைவியல், கற்பியற்சூத்திரங்களும், அவற்றுக்கிலக்கியமாக அமைந்ததும், திருமாலுகந்தருளிய நிலங்களின்மீது சொற்சுவை பொருட்சுவையாதிய பலநலனுமமைய இவரால் இயற்றப்பெற்றதுமான திருப்பதிக்கோவையும் வரையப்பெற்றதோர் ஓலைச்சுவடி இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் உளது. சிதன்முதலியவற்றாற்சிதைந்தொழியாது காக்கக் கருதி, இந்நூல், மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் என்ற பெயருடன் தனிப்புத்தகமாகப் பிரித்துக்கொள்ளத்தக்கவாறு பக்கஎண்கள் கொடுத்து அச்சிட்டுச்சேர்த்து இச் செந்தமிழ்ப்பகுதி தொடங்கிச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிடப்படுகிறது. ஓரே பிரதியினுள்ளவாறு வெளியிடுவதிற் சிற்றறிவுடைய என்னால் ஏற்படும் வழுக்களை அறிஞர்கள் திருத்தியளிப்பார்களென்று நம்புகிறேன். மற்றும், இந்நூற் பிரதியுடையோர் கொடுத்துதவுவார்களாயின் நன்கு பரிசோதித்து அச்சிட உதவியாயிருக்குமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதவிப்பத்திராதிபர்.